REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஏப்ரல் 4 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 80 | Tuesday 04, April, 2023 | 16 பக்கங்கள் | 50/-




# தமிழ் அரசியல் கைதிகள் மூவர் 14 வருடங்களின் பின் விடுதலை!

## வவுனியா மேல்நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

**அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் எதுவுமே நிரூபிக்கப்படாத நிலையில், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் அவர்களை விடுவித்தார்**





(வவுனியா விஷேட நிருபர்)

பதினான்கு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகள் நேற்று வவுனியா மேல் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவுமே நிரூபிக்கப்படாத நிலையில், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனால் நேற்று இவர்கள் விடுவிக் கப்பட்டனர். அந்தவகையில், கடந்த 2009 ஆம்

06

# புத்தாண்டு சுபநேரப் பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



தமிழ், சிங்கள புத்தாண்டு சுபநேரப் பத்திரம் பாரம்பரிய மற்றும் சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று

06



வசந்த முதலிகேவின் விடுதலைக்கு எதிர்ப்பு

**சட்டமா அதிபரின் மனுவை ஜூன் 01இல் விசாரிக்க தீர்மானம்**

03

# அரசின் திட்டமிட்ட செயற்பாட்டினால் GAS சிலிண்டரின் விலை குறைப்பு

## 1000 ரூபாவுக்கும் அதிகளவில் குறைக்க அரசு எதிர்ப்பார்ப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



மார்ச் மாதத்தில் சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை குறைவடைந்ததாலும் ரூபாவின் பெறுமதி பலமடைந்து டொலருக்காக வழங்க வேண்டிய ரூபாவின் பெறுமதி குறைவடைந்தமை உள்ளிட்ட காரணங்களின் பிரதிபலனாக சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை 1000 ரூபாவுக்கு அதிகமாக குறைப்பதற்கு முடிந்துள்ளதாகவும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் தினகரனுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கையில் செலவுகளை கட்டுப்படுத்தும் விதம், விலைக்கொள்கைகள், மின்சாரம், எரிவாயு, எரிபொருள் ஆகியவை தொடர்பில் பின்பற்ற வேண்டியவை சம்பந்தமாக அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் பின்பற்றப்பட்ட தவறான கொள்கை காரணமாக அதிக விலையில் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டதால் பாரியளவு நட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்தது. அதனால் அதனைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் வங்குரோத்து நிலையை அடைந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிலையை மாற்றி உலக சந்தையில் விலைகள் குறைவடையும் போது அதன் பிரதிபலனை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில் விலைச்சூத்திரம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சுகாதாரத் துறை பிரச்சினைகளுக்கு ஒரு மாத காலத்திற்கு தீர்வு

## சுகாதார அமைச்சர் கெஹெலிய நம்பிக்கை

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பொறுப்பற்ற விதத்தில் செயற்படும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவியதால்

06

# வருடத்தின் முதல் காலாண்டு முடிவதற்குள் அரசாங்க ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



(லோரன்ஸ் செல்வநாயகம்)

இந்த வருடத்தின் முதல் காலாண்டு நிறைவடைவதற்குள் அரசாங்க ஊழியர்களுக்காக விசேட கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். அதேவேளை, அரசாங்கம் பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள போதும்

06

# லிற்றோ GAS விலை 1000 ரூபாவால் குறைப்பு

## இன்று நள்ளிரவு முதல் குறைவடையும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

லிற்றோ சமையல் எரிவாயுவின் விலையை இன்று (04) நள்ளிரவு முதல் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இது தொடர்பில் நேற்றுத் தெரிவித்தார். 12.5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை சுமார் 1000 ரூபாவால் குறைக்க எதிர்பார்க்கிறோம். அந்த வகையில் இன்று (04) மதியமே புதிய விலை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படும். 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டருக்கான விலைக்குறைப்பையடுத்து ஏனைய சமையல் எரிவாயு சிலிண்டருக்கான விலைகளிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



சமையல் எரிவாயுவின் விலை, இந்தளவு அதிக தொகையளவில் குறைக்கப்படுகின்றமை வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும் உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை வீழ்ச்சியடைந்துள்ளமை, நாட்டின் ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளமை உள்ளிட்ட விடயங்களை கவனத்திற்கொண்டே இந்த விலை குறைப்பை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.






**தரப்பரிசோதனை செய்யப்படாத தேங்காய் எண்ணெய் பாவனையில்**

03

# மேன்முறையீட்டையடுத்து ராகுல் காந்திக்கு பிணை

## சூரத் நீதிமன்றம் தீர்ப்பு



ராகுல் காந்திக்கு மேல் முறையீட்டுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. குஜராத்தின் சூரத் நகரிலுள்ள நீதிமன்றம் இந்தப் பிணையை நேற்று திங்கட்கிழமை வழங்கியதுடன் இவ்வழக்கை இம் மாதம் (14) விசாரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இம்சிக்கும் வகையில், 2019 ஆம் ஆண்டு ராகுல்காந்தி உரையாற்றியிருந்தார்.

06

# இலங்கை இந்திய கடற்படையினரின் சமுத்திரவியல் பயிற்சி 'ஸ்லய்நெக்ஸ் - 2023'

## நேற்று கொழும்பு துறைமுக பகுதியில் ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை மற்றும் இந்திய கடற்படையினர் இணைந்து நடத்தும் 'ஸ்லய்நெக்ஸ் 2023' சமுத்திரவியல் பயிற்சி நேற்று ஆரம்பமாகியுள்ளது. கொழும்பு துறைமுகப் பகுதியில்

06



# கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் நேற்று நிலத்தாழிறக்கம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் நேற்று நிலம் தாழிறங்கியது. கொழும்பு வெள்ளவத்தை ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியில் கடல்வழிப் பாதையில், இந்நிலத் தாழிறக்கம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் போது வீதியில் பயணித்த



மோட்டார் சைக்கிள் ஒன்று சிறு அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

06

# மிதந்து வந்த ஐஸ்போதை பொதிகள் படையினரால் மீட்பு

## ஏழு கோடி பெறுமதியென மதிப்பீடு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தலைமன்னாரை அண்டிய கடற்பரப்பில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில், நாலு கிலோ ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. இதன் பெறுமதி ஏழு கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். தலைமன்னார், வெலிபற கடற்பகுதியில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. அப்பகுதிக் கடலில் மிதந்து வந்த பொதிகளை

06

# கைவிடப்பட்ட 497 குளங்களை புனரமைக்கும் பணிகள் ஆரம்பம்

## உலக வங்கியின் 44 மில்லியன் டொலரில் திட்டம்

சுமார் ஏழு தசாப்தங்களாக கைவிடப்பட்ட 497 குளங்களை புனரமைக்கும் பணிகள் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கென உலக வங்கி 44 மில்லியன் அமெரிக்க

06



# அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

**வழமையான நடவடிக்கைகள் பாதிப்பு ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம்**

லோரன்ஸ் செல்வநாயகம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம்

06



# வடக்கு கடற்றொழிலாளர்களின் போராட்டத்துக்கு விரைவில் தீர்வு

## பிரதேச செயலாளர், பொலிஸார் உறுதி

*யாழ். விசேட நிருபர்*



ஒரு வாரத்துக்குள் தீர்வு என்ற பொலிஸாரின் வாக்குறுதிக்கமைய வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சுருக்குவலை உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில்களை தடுத்து நிறுத்துமாறு கோரி வடமராட்சி வடக்கின் 14 கடற்றொழிலாளர் சங்கங்களால் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதேச செயலகம், பருத்தித்துறை வீதியை முற்றுகையிட்டு நேற்று (03) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலக செயற்பாடுகள், பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

இதனையடுத்து பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸார் போராட்டகாரர்களுடன் சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். கடற்படையினருடன் கலந்துரையாடி ஒரு வாரத்துக்குள் சுருக்குவலை உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் வாக்குறுதியளித்தனர்.

இந்நிலையில் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன் ஜனாதிபதிக்கான மகஜரொன்று போராட்டகாரர்களால் பிரதேச செயலாளரிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இதனையடுத்து பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பியது.

# கிளிநொச்சி மாணவி மீது குண்டர்கள் தாக்குதல்

## வடக்கு ஆளுநரிடம் தாயார் முறைப்பாடு

*கோப்பாய் குறூப் நிருபர்*

கிளிநொச்சியில் குண்டர்களால் தாக்கப்பட்ட பாடசாலை மாணவிக்கு உரிய முறையில் சிகிச்சை வழங்கப்படவில்லையென மாணவியின் தாயார் ஆளுநருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய விளையாட்டுப் போட்டியில் குண்டர்கள் புகுந்து தாக்குதல் நடத்தியதில் மாணவியொருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மாணவியின் தலையில் பலமாக தாக்கப்பட்டிருந்தமையால் ஆறுக்கு மேற்பட்ட தையல்கள் போடப்பட்டன.

எனினும் கிளிநொச்சி வைத்தியசாலையில் மாணவியின் தலைப்பகுதி தொடர்பில் "எக்ஸ்ரே" ஒளிப்படம் எடுக்கப்படாததோடு உடலின் ஏனைய பகுதிகளிலிருந்த காயங்கள் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகம் கண்டுகொள்ளவில்லையென அவரது தாயார் வட மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய வட மாகாண ஆளுநர் நேரடியாக பாதிக்கப்பட்ட தாயாருடன் தொலைபேசியில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது பாதிக்கப்பட்ட மாணவியின் தாயார் தனது பிள்ளைக்கு வழங்கப்பட்ட சிகிச்சை முறை தொடர்பில் மன வருத்தத்துடன் ஆளுநரிடம் தெரிவித்துள்ளார்.

மாணவியின் தலைப்பகுதியின் செயற்பாடுகள் தொடர்பில் எக்ஸ்ரே ஒளிப்படம் மூலம் மருத்துவ அறிக்கை உறுதிப்படுத்த வேண்டுமென கூறியதுடன் இதுதொடர்பில் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கைகளையும் உடனடியாக வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிப்பாளருக்கு பணிப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி வடமாகாண கல்வி அமைச்சு இச்சம்பவம் தொடர்பில் விரிவான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# அனுமதியின்றி இயங்கிய சிறுவர் இல்லம் முற்றுகை

*கோப்பாய் குறூப் நிருபர்*

யாழ். இருபாலையில் கிறிஸ்தவ சபையொன்றினால் அனுமதியின்றி நடத்தப்பட்ட சிறுவர் இல்லம் முற்றுகையிடப்பட்டு அதிலிருந்து 13 சிறுவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்னடத்தை அலுவலர்களினால் நேற்றுமுன்தினம்(02) முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையிலேயே இச்சம்பவம் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் இருபாலை பகுதியிலுள்ள கிறிஸ்தவ சபையொன்றினால் அனுமதியின்றி சிறுவர் இல்லம் நடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்னடத்தை அலுவலகர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுவர்கள் துன்புறுத்தப்பட்டதாகவும் உரியவகையில் உணவு வழங்கப்படவில்லையெனவும் விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவர்கள் சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஆஜர்படுத்தப்பட்டு மருத்துவ அறிக்கை பெற்றதன் பின்னர் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாவட்டச்செயலக அதிகாரிகள் விஜயம்

*பரந்தன் குறூப் நிருபர்*



கிளிநொச்சியில் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மினி சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்டச் செயலகத்தின் துறைசார் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளனர்.

மினி சூறாவளி காரணமாக கிளிநொச்சி மகா வித்தியாலய வளாகத்தில் காணப்பட்ட மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன், பாடசாலையின் தற்காலிக கொட்டகைகளும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன.

இதேவேளை, பாடசாலைக்கு முன்னால் இருந்த முதிர்ச்சியடைந்த மரமொன்றின் கிளை முறிந்து வீழ்ந்ததில் அவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

மேலும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக முறிந்து வீழ்ந்த மரங்களை அகற்றுவதற்கும், ஆபத்தான மரங்களை வெட்டுவதற்கும் துறைசார்ந்த பங்குதாரர்களுடன் இணைந்து மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் கள விஜயமொன்றினை நேற்று காலை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, அரச மர கூட்டுத்தாபனம், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றின் அதிகாரிகள், பாடசாலை அதிபர், கிராம சேவகர் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

வகுப்பறை கற்றல் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள முறிந்த மரங்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், ஆபத்தான மரங்களை அரச நடைமுறைகளுக்கமைய வெட்டுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கிளிநொச்சி குமரித் தமிழ்ப்பணி மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவும் தமிழ் மொழி தின நிகழ்வுகளும் அண்மையில் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகை சார் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. இதன்போது ஆங்கில மருத்துவத்தை தமிழில் போதித்த மருத்துவர் சாமுவேல் பிஸ்க் கிரீன் நினைவு விருது முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசன் அடிகளாருக்கு வழங்கப்பட்டது. விருது கையளிக்கப்படுவதையும் தனித்தமிழ் ஆர்வலர் நா.வை குமரிவேந்தன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன், கிளிநொச்சி மாவட்ட திட்ட பணிப்பாளர் கணேசலிங்கம் ஆகியோர் உடன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மன்னார் நகர சபை தரமுயர்த்தலை வர்த்தமானியில் பிரசுரிக்கவும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி கோரிக்கை

*தலைமன்னார் விசேட நிருபர்*



மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவதற்கு அமைச்சரவையிலிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கின்றபோதும் இதுவரை இதுதொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவில்லையென வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது,

மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவதற்கு அமைச்சரவையிலிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கின்றபோதும் இதுவரை இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவில்லை.

இதுதொடர்பாக தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டு வர விரும்புகின்றேன். எனவே கூடிய விரைவில் இதனை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களின் கல்விக்கு தடை ஏற்படுத்த அனுமதிக்க முடியாது

## பொறுப்பை நிறைவேற்றாவிட்டால் சட்ட நடவடிக்கை

*கோப்பாய் குறூப் நிருபர்*



வட மாகாணத்திலுள்ள முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களை அரச பஸ்கள் தொடர்ச்சியாக ஏற்றாது செல்வது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு வலயத்துக்குட்பட்ட A9 வீதியில் அமைந்துள்ள பாடசாலை மாணவர்களை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் ஏற்றாது செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மாணவர்களின் கற்பதற்கான உரிமையை பறிப்பதற்கோ அல்லது தடைகளை ஏற்படுத்துவதற்கோ துணை நிற்பதை அனுமதிக்க முடியாது.

A9 வீதியில் பயணிக்கும் அரச பஸ்கள் மாணவர்களை ஏற்றாது செல்வது தொடர்பில் எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

உரிய தரப்பினருக்கு இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பணித்துள்ளேன்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகமும் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை தடையின்றி மேற்கொள்வதற்கு வடமாகாண கல்வி அமைச்சர், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் வடமாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை ஆகியன தமது பொறுப்புகளை உணர்ந்து செயற்பட வேண்டும்.

ஆகவே மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்காமல் இருப்பதற்கு உரிய தரப்பினர் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்படாவிட்டால் நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# வருடாந்த மஹோற்ஷவம்

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்ஷவம் நாளை (5) புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அதனை தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

14/04/2023 சித்திரை புதுவருடப் பிறப்பன்று தேர்த்திருவிழாவும்

15/04/2023 தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

# இரணைமடு குள நீர்ப்பாசன வாய்க்காலில் குறைபாடு

*பரந்தன் குறூப் நிருபர்*

கிளிநொச்சி இரணைமடு குளத்திலிருந்து நாளாந்தம் பெருமளவான நீர் பிரதான நீர்ப்பாசன வாய்க்கால் ஊடாக வெளியேறி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளம் சுமார் 3000 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளபோதும் அதன் புனரமைப்பு பணிகளில் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் குளத்திலுள்ள நீர் தற்போது நீர்ப்பாசன கால்வாய் ஊடாக வெளியேறி வருகின்றது.

அதாவது சிறுபோக செய்கைக்கு தண்ணீர் திறந்து விடப்படாத நிலையில் தண்ணீர் இவ்வாறு வெளியேறிக்கொண்டிருக்கிறது.

நாளாந்தம் பெருமளவான நீர் வாய்க்கால் வழியாக வெளியேறி கழிவு நிலங்களிலும் விவசாய நிலங்களிலும் தேங்கி காணப்படுகின்றன.

இவ்வாறு குளத்தின் புனரமைப்பு பணிகளிலுள்ள குறைபாடு காரணமாகவே தண்ணீர் வெளியேறி வருவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஆபத்தான நிலையில் கிளிநொச்சி குடமுருட்டிகுளம்: விவசாயிகள் கவலை

*பரந்தன் குறூப் நிருபர்*



கிளிநொச்சி குடமுருட்டிகுளத்தின் புனரமைப்பு பணிகள் உரிய காலத்தில் முன்னெடுக்கப்படாமையால் குளம் ஆபத்தான நிலையில் காணப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற குடமுருட்டி குளத்தின் புனரமைப்பு பணிகள் கடந்த ஆண்டுகளில் மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தாலும் இதுவரை எந்தவிதமான புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக உலக வங்கியின் நிதியுதவியுடன் குளத்தை புனரமைப்பதாக மக்களுக்கு உறுதியளித்திருந்த போதும் அதனை புனரமைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 1100 ஏக்கர் நிலப்பரப்பில் 400 ற்கு மேற்பட்ட விவசாயிகள் பெரும்போகச் செய்கையினையும் 300 ஏக்கர் தொடக்கம் 650 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கையினையும் மேற்கொண்டு வருகின்றனர். இக்குளத்தின் அணைக்கட்டுக்கள் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

கடந்த பருவமழையின் போதும் குளம் ஆபத்தான கட்டத்தை அடைந்து பிரதேச மக்களால் பாதுகாக்கப்பட்டது. வருடாந்தம் பருவமழை காலங்களிலும் குளம் ஓர் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. எனவே குளத்தின் புனரமைப்பு பணிகளை உரிய காலத்தில் முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# லயன்ஸ் கழக அதிர்ஷ்ட இலாபச்சீட்டு குலுக்கல் நிகழ்வு

*சாவகச்சேரி விசேட நிருபர்*

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கட்டட அமைப்புக்காக ஒழுங்கமைக்கப்பட்ட அதிர்ஷ்ட இலாபச்சீட்டு குலுக்கல் நிகழ்வு எதிர்வரும் 09/04/2023 ஞாயிற்றுக்கிழமை 12மணிக்கு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சீட்டிழுப்பின் பின்னர் 10/04 திங்கட்கிழமை அதிர்ஷ்டசாலிகள் விபரம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் என சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு நிகழ்வு கடந்த வருடம் மேற்கொள்ள உத்தேசித்த போதிலும் நாட்டு நிலைமை காரணமாக பிற்போடப்பட்டு 09/04 அன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளுக்கு இலவச உரம்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை கைதடி கமநலசேவை நிலையத்தில் வைத்து இலவச ரி.எஸ்.பி உரம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

ஒரு பரப்பிற்கு 400 கிராம் என்ற அடிப்படையில் கடந்த வருடம் நெற்பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு மேற்படி உரம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

தகுதியுடைய நாவற்குழி கிழக்கு விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து இலவச உரத்தை பெற்றுக் கொள்ளுமாறு கமக்கார அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஏப்ரல் 4 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன්


**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.04 |
| லுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# இடைப்பட்ட வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்தல்

**சுற்றுநிருபத்தை பின்பற்றுமாறு கல்வியமைச்சு அறிவுறுத்து**

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தேசிய பாடசாலைகளில் இடைப்பட்ட வகுப்புக்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும்போது உரிய சுற்று நிருபத்தை பின்பற்றுமாறு கல்வி அமைச்சர் தேசிய பாடசாலைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

தேசிய பாடசாலைகளின் இடைப்பட்ட வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வது தொடர்பில் கல்வியமைச்சு விசேட அறிக்கை வெளியிட்டுள்ளது. அதற்கிணங்க தேசிய பாடசாலைகளின் 2ஆம் வகுப்பிலிருந்து 4ஆம் வகுப்புவரை மற்றும் 7ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்புவரையான இடைப்பட்ட வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் போதே இச்சுற்றுநிருபத்தை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இச்சுற்றுநிருபத்துக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இம்மாதம் 21ஆம் திகதிக்குப் பின்னர் தேசிய பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, தேசிய பாடசாலைகளில் இடைப்பட்ட வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ள கல்வியமைச்சினால் கடிதங்கள் வழங்கப்பட மாட்டாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைக்கு இன்று முதல் விடுமுறை

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளுக்கு இன்று (04) முதல் விடுமுறை வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கான முதல் பாடசாலை கல்விச் செயற்பாடுகளின் இரண்டாம் கட்டம் ஏப்ரல் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இரண்டாம் கட்ட பாடசாலை தவணை மே 12 வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

06

## தவக்கால சிந்தனை



### மறுதலிப்பும் – காட்டிக்கொடுப்பும்

(யோவான் 12: 21 – 33, 36 – 38)

பரிசுத்த வாரத்தில் பயணிக்கின்றோம்.இயேசுவின் இறுதி யாத்திரைப் பயணத்தில் திருத்தூதர்களின் மனநிலை எவ்வாறு காணப்பட்டது என்பதனை இன்றைய நற்செய்தி மிகத் துல்லியமாகப் படம்பிடித்துக் காண்பிக்கிறது.

இயேசுவே தெளிவாக சொல்கிறார் உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான். மற்றுமொருவன் மறுதலிப்பான் என்று. யூதாஸ் அப்பத்தை பெற்று உண்டவுடன் அலகை அவனுள் குடிகொள்கிறது. அவன் அவ்விடத்தை விட்டு அகல்கிறான்.

அந்நேரம் இருள் படர்ந்த நேரம் என்று நற்செய்தி அழகான உருவகத்தைக் காண்பிக்கிறது. இருள், அலகை இரண்டுமே அழிவின் சக்திகள். அத்தகைய அழிவின் சக்திகளின் பிடியில் யூதாஸ் சிக்கி விடுகிறான். அதிலிருந்து அவனால் வெளியே வரமுடியவில்லை.

மறுபுறம், திருத்தூதர்களின் தலைவராகிய பேதுரு'ஆண்டவரே நான் உம்மோடு இறுதிவரை பயணிப்பேன்'என்பவருக்கு இயேசுவின் பதில் 'இன்றே நீ என்னை மூன்றுமுறை சேவல் கூவுவதற்கு முன்பு மறுதலிப்பாய்'என்கிறார். இயேசுவுடன் கூடவே வாழ்ந்து, அவர் போதித்தவற்றைக் கேட்டு, அவர் செய்த செயல்களைக் கண்டு வாழ்ந்த சீடர்களால் அவருடன் கூடவே பயணிக்க முடியாமற் போனமை வருந்தலுக்குரியதே.

ஆயினும் இறைத்திட்டத்தினை நிறைவு செய்திட வந்த இயேசுவுக்கு அது ஒன்றும் புதிதல்ல. மனிதப் பண்புகளால் இயேசுவிடமிருந்து விலகாது செயற்பட கல்வாரி நாயகனிடம் பதில் கேட்டு இரந்து நிற்போம்.

அருட்தந்தை நவாஜி...




### இறை மன்னிப்பை பெற்றுக்கொள்வோம்

பாவமன்னிப்பின் மாதமாகவும் விளங்குகிறது ரமழான். அதனால் ஏனைய மாதங்களில் விடுகின்ற குறைபாடுகளுக்காகவும் தவறுகளுக்காகவும் ரமழானில் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ள முயற்சிப்பது இறையடியார்களின் பொறுப்பாகும். ஏனெனில் ரமழானில் கிடைக்கப்பெறுகின்ற இப்பாக்கியம் மகத்துவம் மிக்கது. ரமழானின் நோன்புகளும் நின்று வணங்குவதும் நல்ல விடயங்களை செய்வதும் இறைநினைவோடு இருப்பதும் அல் குர்ஆனோடு தொடர்புகளை பேணுவதும் தொழுவதும் இறை மன்னிப்பை பெற்றுத்தரக்கூடியவையாகும்.

'யார் ரமழான் மாதத்தில் ஈமானிய நம்பிக்கையுடனும் மனத்தூய்மையுடனும் நோன்பு நோற்கிறாரோ அவரது முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும்' (ஆதாரம் புஹாரி, முஸ்லிம்)

'யார் ரமழானில் ஈமானிய நம்பிக்கையுடனும் மனத்தூய்மையுடனும் நின்று வணங்குகிறாரோ அவரது முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும்' (ஆதாரம் புஹாரி, முஸ்லிம்)

'யார் லைலதுல் கத்ருடைய தினத்திலே ஈமானிய நம்பிக்கையுடனும் மனத்தூய்மையுடனும் நோன்பு நோற்கிராறோ அவரது முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும்' (ஆதாரம் புஹாரி முஸ்லிம்)

'ஐந்து நேர தொழுகைகள், ஒரு ஜும்ஆவிலிருந்து அடுத்த ஜும்ஆ வரையான காலப்பகுதி, ஒரு ரமழானிலிருந்து அடுத்த ரமழான் வரையான காலப்பகுதி இந்த இடைப்பட்ட காலத்திலுள்ள பாவங்களை இச்செயல்பாடுகள் மன்னித்துவிடும். ஆனால் பெரும் பாவங்களை தவிர்ந்துகொள்ள வேண்டும். (ஆதாரம் முஸ்லிம்)

ஒரு மனிதன் ஒரு பாவத்தை செய்துவிட்டு அதன் தொடராக இன்னொரு பாவத்தை செய்வது தண்டனையின் அடையாளமாகும். ஒரு நல்ல காரியத்தை செய்துவிட்டு அதன் தொடராக இன்னொரு நன்மையான காரியத்தை செய்வது நற்கூலியின் அடையாளமாகும் என்று ஸஹாபாக்கள் கருதுவார்கள் என்பதாக இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) தனது ஸபதிய்யா என்ற நூலில் குறிப்பிடுகிறார்கள்.

எனவே ரமழானை பயன்படுத்தி உள்ளத்தை பாவச்சுமைகளிலிருந்து தூய்மைப்படுத்திக் கொள்வோம்.

அஷ்ஷெய்க
யூ.கே. ரமீஸ் எம்.ஏ
சமூகவியல் ...

# தரப் பரிசோதனை செய்யப்படாத தேங்காய் எண்ணெய் பாவனையில்

**தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவிப்பு**

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டில் உபயோகிக்கப்படும் தேங்காயெண்ணெயில் 72% மானவை தரப் பரிசோதனைக்கு உட்படாதவை என கண்காணிப்பின் மூலம் தெரியவருவதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள மேற்படி அலுவலகம், தேங்காயெண்ணெய் உற்பத்தி தொடர்பாக ஐந்து நட்சத்திரங்களை கொண்ட இலச்சினைகளை 2019 ஆம் ஆண்டில் ஏழு தேங்காயெண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மாத்திரமே பெற்றுள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் தேங்காயெண்ணெய் உற்பத்தி நடவடிக்கைகளை சிறந்த தர முடையதா? என்பதை பரிசோதிக்க வேண்டியது தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாகும் என்றும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை,தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் நிலவும் ஊழியர்களுக்கான தட்டுப்பாடு தீர்க்கப்படவில்லை. மேலும், இங்குள்ள உபகரணங்களும் இன்னும் திருத்தப்படாதுள்ளன.

இதனால், 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட துன்கண்ணாவ தும்பு உற்பத்தி நிறுவனம் கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், 15 இலட்சம் ரூபாவுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

**வசந்த முதலிகேவின் விடுதலைக்கு எதிர்ப்பு**

# சட்டமா அதிபரின் மனுவை ஜூன் 01இல் விசாரிக்க தீர்மானம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

வசந்த முதலிகேயை விடுதலை செய்வதற்கு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள மேன்முறையீடு, ஜூன் (01) விசாரிக்கப்படவுள்ளது. இந்த மனு மீதான விசாரணை

நேற்று (03) எடுத்துக்கொள்ளப்பட்ட போதே,கொழும்பு மேல் நீதிமன்றம் இந்தத் தீர்மானத்தை எடுத்தது. இதன்போது பிரதிவாதியான வசந்த

06




தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்

இனிமையாகத் தெரியும் நிழலும் நீரும்கூடக் கேடு விளைவிக்கக் கூடியவையாக இருந்தால் அவை தீயவைகளாகவே கருதப்படும். அது போலவேதான் உற்றார் உறவினராக உள்ளவர்களின் உட்பகையும் ஆகும்.

# உணவுப் பாதுகாப்புக்காக மற்றொரு வேலைத்திட்டம்

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுவரும் சூழலில் நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலான மற்றொரு வேலைத்திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. விமானப்படையினரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டம் அநுராதபுரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதோடு, மூன்று மில்லியன் பலாமரக்கன்றுகள் நாடெங்கிலும் நடப்பட உள்ளன.

கடந்த வருடம் நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியானது நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பிலும் நெருக்கடிகளை ஏற்படுத்தியது. அந்நெருக்கடி மிக மோசமான அச்சுறுத்தலை தோற்றுவிக்க முடியும் என உலக வங்கி, யுனிசெப் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களும் சுட்டிக்காட்டின.

ஏனென்றால் பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைக்கு அவசியமான பசளை கிடைக்கப் பெறாமையினால் பெரும்பாலான விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதில் இருந்து தவிர்ந்து கொண்டனர். பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கும் போதிய அறுவடை கிடைக்கவில்லை. இதற்கு பசளை கிடைக்கப் பெறாமை முக்கிய காரணமாகும்.

அதேநேரம் அந்நிய செலாவணி பற்றாக்குறையோடு ஆரம்பமான இப்பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதிலும் நெருக்கடி நிலை உருவாகி இருந்தது. இதன் விளைவாக நாட்டில் ஒரு பகுதியினர் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் கடும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர். நடுத்தர மக்கள் வருமானத்தை இழந்தனர்.

இதேவேளை, உக்ரைன் மீதான ரஷ்ய போர் காரணமாக இலங்கைக்குத் தேவையான கோதுமை கிடைக்கப் பெறவுமில்லை. இந்நிலையில், உலக உணவுத் திட்டம் உள்ளிட்ட பல சர்வதேச நிறுவனங்கள் இலங்கையின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்துவதன் அவசியம் குறித்து வலியுறுத்தி வந்தன.

இவ்வாறான சூழலில், நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்துவதில் விஷேட கவனம் செலுத்தினார். இதன் நிமித்தம் கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுவூட்டுவதற்கான பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அத்தோடு உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்தவென தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் விஷேட குழுக்களும் அமைக்கப்பட்டன.

அதன் ஊடாக உணவுப் பயிர்ச்செய்கையை நாடெங்கிலும் முன்னெடுப்பதற்குத் தேவையான வேலைத்திட்டங்கள் விரிவான அடிப்படையில் ஆரம்பமாகின. உணவுப் பயிர்ச்செய்கைக்கு தேவையான பசளையைப் பெற்றுக் கொடுத்தல், பசளைக் கொள்வனவுக்கு மானிய நிதிக் கொடுப்பனவு உள்ளிட்ட பல விஷேட ஊக்குவிப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இப்பின்னணியில் இந்நாட்டு விவசாயிகள் உணவுப் பயிர்ச்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபடக்கூடிய சூழல் உருவானது. இதன் பிரதிபலனாக தற்போது நாட்டில் மரக்கறி மற்றும் பழவகைகளின் விலைகளில் மூன்று மடங்கு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

இதேவேளை, சமுர்த்தி, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்தும் மற்றொரு வேலைத்திட்டமாக 29 இலட்சம் குடும்பங்களுக்கு மாதத்திற்கு பத்து கிலோ வீதம் இரு மாதங்களுக்கு அரிசியை இலவசமாக வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

8040 மில்லியன் ரூபாவுக்கும் மேலான செலவில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இந்நாட்டில் இவ்வாறான பாரிய தொகை செலவில் நிவாரணத் திட்டமொன்றை முன்னெடுப்பது இலகுவான காரியமல்ல. நாட்டு மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதை அரசாங்கம் இத்திட்டத்தின் ஊடாக மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் மற்றொரு வேலைத்திட்டமாக நாடெங்கிலும் 3 மில்லியன் பலாமரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பலா சார்ந்த உற்பத்திகளுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை உருவாக்கவும் பலா சார்ந்த உணவு உற்பத்திகளை நாட்டு மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஆகவே நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்தவென முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒவ்வொரு பிரஜையும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தியே இவ்வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கும் வேலைத்திட்டங்கள் இவை. மாறாக அற்ப அரசியல் இலாபம் தேடக்கூடிய திட்டங்கள் அல்ல. மக்களின் உணவுப் பாதுகாப்பும் போஷாக்கும் உறுதிப்படுத்தப்படும் போது வளமான தேசம் உருவாகும் காலம் வெகுதொலைவில் இருக்காது என்பதே மக்களின் கருத்தாகும்.

editor.tkn@lakehouse.lk

# சிட்னி முருகன் கோயில் இரதோற்சவம் இன்று



சிட்னி முருகன் கோயில் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெறுகின்றது. குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பார் என்பதைப் போன்று, சைவத்தமிழர்கள் இருக்கும் இடமெல்லாம் முருகன் கோவில் கொண்டிருப்பார் என்று கூறலாம். இதனை மெய்யாக்கும் வண்ணம் அவுஸ்திரேலியாவின் வைகாசிக் குன்றத்தில் (Mays Hills) அமைந்துள்ளது சிட்னி முருகன் கோயில்.

அவுஸ்திரேலியாவில் தமிழர்கள் அதிகம் வாழும் சிட்னி மாநகர் முருகன் கோயிலின் மகோற்சவம் ஆண்டு தோறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவையடுத்து தீர்த்தோற்சவம் நடைபெறும். பதினோராம் நாள் பூங்காவனம் திருக்கல்யாண விழாவுடன் நிறைவடையும்.

இவ்வருட தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை (04/4/2023) பெருந்திரளான பக்தர்களின் பங்கேற்புடன் நடைபெறுகின்றது. பக்தர்கள் ஏராளமானோர் காவடியெடுத்து நேர்த்திக்கடன் நிறைவேற்றுகின்றனர்.

சிட்னி முருகன் கோயிலின் சிறப்பம்சமாக அலங்காரத்தூண்களில் ஆறுபடை வீடுகள் மற்றும் கதிர்காமம், செல்வச்சந்நிதி, வெருகலம்பதி, நல்லூர் ஆகிய திருத்தலங்களில் கோயில் கொண்டுள்ள முருகனின் திருவுருவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஐந்து கருவறைகளைக் கொண்டது சிட்னி முருகன் ஆலயமாகும். வலது பக்கம் விநாயகரும் இடது பக்கத்தில் வள்ளி தெய்வானை சமேதரராக முருகனும் இடையில் உள்ள மூன்று கருவறைகளில் வலப்பக்கத்தில் சிவலிங்கமும் இடப்பக்கத்தில் சிவகாமசுந்தரியும் நடுவண் கருவறையில் முருகனும் எழுந்தருளியுள்ளனர். நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரர் ஆகியோருக்கு தனித்தனியே சந்நிதிகள் உள்ளன.

சைவ இளைஞர்கள் இக்கோயில் பணிகளில் பெரும் பங்களிப்பு வழங்கி வருகின்றனர். இக்கோயிலில் துப்புரவாக்கல் முதல் வாகனம் காவுதல், தேர் இழுத்தல், நந்தவனம் பராமரித்தல், கூட்டு வழிபாட்டில் கலந்து கொள்ளுதல் போன்ற பல வழிகளில் தமது பங்களிப்பினை அவ்விளைஞர்கள் வழங்கி வருகின்றனர். வைகாசிக் குன்றத்தில் (Mays Hills) வீற்றிருக்கும் சிட்னி முருகன் கோயில் (Sydney Murugan Temple) அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் தலைநகர் சிட்னி நகரிலிருந்து 25 கி.மீ மேற்காக உள்ள மேய்சு ஹில் என்ற புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ளமை சைவ மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும். முருக ஆலயத்தின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள முருகனின் திருவுருவம் மகாபலிபுரத்து சிற்பக்கலை நிபுணரால் ஆகம நெறிமுறைக்கு அமைய நுட்பமாகச் செதுக்கப்பட்டமை இன்னோர் சிறப்பாகும்.



– ஐங்கரன் விக்கினேஸ்வரா

# தமிழ் மக்கள் அன்று முதல் இன்றுவரை ஐ.தே.கவுக்கும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமே ஆதரவு

'ஜனாதிபதியுடன் உடன்படிக்கை ஏற்படுத்தி தமிழர்களின் உரிமைகள், தேவைகளைப் பெற்றெடுக்க வேண்டுமென்பதே எமது மக்கள் முன்வைக்கும் கோரிக்கை' என்கிறார் இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில்



தமிழ் மக்கள் அன்று தொடக்கம் இன்றுவரை தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மற்றும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆதரவளித்து வந்திருக்கின்றனர். இதில் ஒளிவு மறைவுக்கு இடமில்லை. இந்நிலையில் நாம் அன்று தொடக்கம் இன்று வரைக்கும் ஆதரவளித்து வரும் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உடன்படிக்கையைச் செய்து எமது உரிமைகளை மற்றும் தேவைகளை பெற்றுத் தரவேண்டும் என்றே தமிழ் மக்கள் தமது அரசியல்வாதிகளிடம் கேட்கின்றார்கள். இதனை தமிழரசுக் கட்சி தலைமைத்துவங்கள் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார். தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்தநாள் நினைவு வைபவம் அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் காயத்ரி கிராமத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் நந்தபாலு தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் உரையாற்றிய கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்ததாவது:

"அன்று தமிழர்களின் அடையாளத்தை பேணிப் பாதுகாப்பதிலே தந்தை செல்வா பல்வேறு தியாகங்களை அஹிம்சை வழியில் மேற்கொண்டார் . அந்த அஹிம்சை வழிப் போராட்டம் வெற்றி அடையாமல் போனதும் ஆயுதப் போராட்டம் உருவானது.

மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த ஆட்சியாளர்களுடன் தந்தை செல்வா அன்று தனித்துவமாக பேசினார். வடக்கு, கிழக்கு தமிழ் மண்ணிலே தமிழ் பேசும் மக்கள் தனித்துவமாக வாழ வேண்டும், உரிமையோடு வாழ வேண்டும் என்று அவர் பல முயற்சிகளை மேற்கொண்டார். அனைத்தும் ஏமாற்றத்தையே தந்தன.

இறுதியில் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வாஅன்று சொன்னார். அந்த நிலைமை தான் இன்று தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இன்று மட்டக்களப்பில் குறிப்பாக மாதவனை, மயிலந்தனை, வாகனேரி போன்ற நிலவளங்களை அபகரிக்க முயற்சி நடைபெறுகின்றது. இந்த வேளையிலே நாம் ஒன்றைச் சிந்திக்க வேண்டும் .தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அன்று தொடக்கம் இன்று வரை ஐக்கிய தேசியக் கட்சிக்கு அல்லது அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து வந்திருக்கின்றனர். இதில் ஒளிவு மறைவு இல்லை. இன்று அதே ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக பதவிக்கு வந்திருக்கிறார். எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உடன்படிக்கைகளை செய்து எமது தமிழ் மக்களின் உரிமைகளை,

தேவைகளை எமது தமிழ்த் தலைமைகள் பெற்றுத்தர வேண்டும் என்று பல தமிழ்மக்கள் என்னிடம் கோரியிருந்தார்கள். அதனை இங்கு நான் பகிரங்கமாக கூறுகின்றேன். இதுகுறித்து கட்சித் தலைமைகள் சிந்திக்க வேண்டும். நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவையோ, கோட்டாபய ராஜபக்ஷவையோ ஒருபோதும் ஆதரிக்கவில்லை. ஆதரிக்கப் போவதுமில்லை. 69 இலட்சம் வாக்குகளை சிங்கள மக்கள் அன்று வழங்கியிருந்தார்கள். இன்று அது தவறு என்பதை உணரத் தொடங்கி இருக்கின்றார்கள். ஆனால் நாம் அன்றும் இன்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இருந்திருக்கின்றோம். எனவே ஜனாதிபதியின் ஆதரவை நாம் பெற வேண்டும். அது எமது தார்மீக கடமையும் நியாயமான உரிமையுமாகும். அதற்காக நாம் சோரம் போகத் தேவை இல்லை. அவருடன் எமது நியாயமான உரிமைகள் பற்றிப் பேசி ஒப்பந்தம் செய்து தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றார்கள் . பாடசாலை கற்றல் உபகரணங்களைக் கூட வாங்குவதற்கு பலர் கஷ்டப்படுகிறார்கள். இந்த மக்களுக்கு உதவ வேண்டும். அம்பாறை மாவட்ட மக்கள் தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இம்மக்களுக்கு உதவுவதில் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும்".

இவ்வாறு கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வி.ரி. சகாதேவராஜா
காரைதீவு குறூப் நிருபர்

# இஸ்லாத்தின் பார்வையில் கணவன், மனைவி அர்ப்பணிப்பே குடும்ப வாழ்வுக்கு அவசியம்



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சர்வதேச லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட 'பெண்களின் உரிமைகள் கிழக்கிலும் மேற்கிலும்' என்ற கருத்தரங்கில் ஈரான் இஸ்லாமிய குடியரசில் இருந்து வருகை தந்திருந்த கலாநிதி ஸாஹிரே மிர்ஜாபரி ஆற்றிய உரை

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில், கணவன்_ மனைவி இடையே உண்மையான ஒற்றுமை, நெருக்கத்தை உருவாக்க, அவர்களின் உள்ளுணர்வு மற்றும் இயற்கை வேறுபாடுகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் இவ்வேறுபாடுகளின் அடிப்படையில், கணவன், மனைவிக்கான உரிமைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

எனவே, குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பு ஆண் மீது சுமத்தப்படுவதன் காரணமாக குடும்பத்தின் முக்கிய அந்தஸ்து அவருக்கு வழங்கப்பட்டு, குடும்பத்திற்காக செலவுசெய்யும் கடமை அவன் மீதே சுமத்தப்பட்டுள்ளதால் நியாயத்தை மதிக்கும் வகையில் குடும்பத் தலைவன் என்ற அந்தஸ்து கணவனுக்கு வழங்கப்படுகிறது.

ஆனால் மேற்கத்திய கலாசாரத்தில் இவ்வேறுபாடுகள் புறக்கணிக்கப்பட்டு ஆண்களுக்கு நிகரான உரிமைகள் பெண்களுக்கும் உள்ளன. மேற்கை உதாரணமாகக் கொண்டியங்கும் பெண்ணியவாதிகளின் பார்வையில், பெண் சுதந்திரம் என்பது வரையறையற்ற ஒன்றாக இருக்கிறது. ஆணோ அல்லது பெண்ணோ தனித்தியங்க முடியாது என்ற யதார்த்தம் இங்கு சவாலுக்கு உட்படுத்தப்படுகிறது.

திருமண பந்தத்திற்கு அப்பால் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதில் எந்த தவறும் கிடையாது என்று மேற்கின் நவீன கலாசாரம் கருதுகிறது. இதன் விளைவாக கருக்கலைப்பு கூட பெண்களின் சுதந்திரம் என்று கருதப்படுகிறது. இது இறுதியில் உடல்ரீதியான, உளரீதியான சிக்கல்கள் மற்றும் தனிமை, அதிர்ச்சி மற்றும் பெண்களுக்கு எதிரான உளவியல் வன்முறைக்கு வழிவகுக்கிறது. கணவன், மனைவிக்கிடையில் ஏற்படும் சிறிய பிணக்கு கூட குடும்பம் சிதைவதற்கு காரணமாக அமைந்து விடுகிறது.

இஸ்லாத்தின் பார்வையில் கணவன், மனைவி ஆகிய இருவரினதும் அர்ப்பணிப்பு குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது. குடும்பத்தில் ஏற்படும் சண்டை சச்சரவுகள் குழந்தைகளின் பாதுகாப்பில் உளவியல் ரீதியாக பெரும் தாக்கம் செலுத்துவது போல் அவர்களது கல்வியிலும் தாக்கம் செலுத்துகின்றன. எனவே, கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து புரிந்துணர்வுடன் வாழ்வதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது.

இரு சாராரும் தம் கற்பைப் பாதுகாக்க இஸ்லாம் கட்டளை இடுகிறது. கற்பொழுக்கம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. முறையான திருமணத்தின் பின்னணியில் பாலியல் இன்பங்களை அனுபவிப்பது கணவன், மனைவி இடையேயான பிணைப்பை பலப்படுத்துகிறது. இளம் ஜோடிகளை ஒன்றாக இணைக்கிறது.

மனிதனின் தனிப்பட்ட, சமூக மற்றும் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சிக்காக இஸ்லாம் பல்வேறு கோணங்களில் இருந்து நோக்குகிறது. பெண்களின் மகிழ்ச்சி மற்றும் முழுமை என்பது குடும்ப பந்தத்தில் இருந்து விடுபடுவதால் ஏற்படுவதல்ல.

உண்மையில் மனைவியின் உரிமைகள் மற்றும் கடமைகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கையின்படி, திருமண ஒப்பந்தத்தின் நிபந்தனையை அவள் ஏற்றுக் கொள்கிறாள். ஆனால் எந்தவொரு பாலியல் வன்முறையையும் பெண்ணின் உடல் மற்றும் உளரீதியான துன்புறுத்தலையும் செய்ய ஆணுக்கு அதிகாரம் இருப்பதாக இங்கு அர்த்தம் கொள்ளப்படக் கூடாது. இஸ்லாத்தின் பார்வையில், சமர்ப்பணம் என்பது பெண்களுக்கு மட்டுமே உரித்தானது அல்ல, தம்பதிகள் ஒருவருக்கொருவர் பாலியல் தேவைகளின் போது உளவியல், ஆன்மீகம் மற்றும் உடல் நிலைகளை கருத்தில் கொள்ள வேண்டும். உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், சமீபத்தில் மேற்கத்திய நாடுகளின் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையைக் கையாள்வதற்காக இயற்றப்பட்டதாகக் கருதப்படும் 'திருமண வன்புணர்வு' என்ற ஒன்று சட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. உண்மையில் வரம்பற்ற தனிமனித சுதந்திரம் மற்றும் தனிமனித சொத்துக் கொள்கைகளில் இருந்து இது உருவானது. இதனால் குடும்பம் என்ற கட்டமைப்பு தகர்க்கப்படுகிறது. மேலும், இவ்வாறான சட்டங்கள் குடும்பம் என்ற கருத்தாக்கத்தின் புனிதத்தன்மையை கெடுத்து, அனைத்து வகையான சகவாழ்வையும் இல்லாதொழித்து பாலியல் வன்முறைக்கான சாத்தியக்கூறுகளை அதிகரிக்கிறது.

# Adrian Zecha உடனான கூட்டமைப்பை ஏற்படுத்திய Hunas Holdings PLC நிறுவனம்

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் Hunas Falls Hotel இன் தாய் நிறுவனமான Hunas Holdings PLC நிறுவனமானது 'Hotelier of the Century' என அறியப்படும் Adrian Zecha இனால் நிர்வகிக்கப்படும் Azotels நிறுவனத்துடன் முக்கிய கூட்டாண்மையை அறிவித்துள்ளது.



இந்த கூட்டாண்மை மூலம் Azotels நிறுவனமானது தற்போதைய Hunas Falls Hotel இனை வில்லாக்களுடன் கூடிய உயர்தர சொகுசு ஹோட்டலாக மேம்படுத்துவதோடு இந்த ஸ்தாபனத்தின் நிர்வாகத்தையும் கையாண்டு, உலகின் சிறந்த ஹோட்டல்களின் வரிசையில் இடம்பிடிப்பதை உறுதி செய்யும்.

Hunas Falls Hotels PLC என முன்னர் அறியப்பட்ட Hunas Holdings PLC நிறுவனமானது விருந்தோம்பல், சுற்றுலா, ஆதனத்துறை, புதுப்பிக்கத்தக்க சக்தி, மற்றும் தேயிலைத் தோட்டங்கள், தொழிற்சாலைகள், தேயிலை தரகு ஆகியவை உள்ளடங்கிய ஐந்துறைகளில் முன்னிலை வகிக்கும் பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனமாகும். Hunas Holdings PLC நிறுவனமானது, நிலைத்தன்மையின் மீது தனது கவனத்தை செலுத்தி தொடர்ந்தும் முன்னேறி வருகிறது.



Hunas Holdings PLC நிறுவனத்தின் தலைவர் தனுக சமரசிங்க, இந்த பங்காளித்துவத்தின் முக்கியத்துவம் பற்றி பேசுகையில், "50 ஆண்டுகால நினைவுகளை கொண்டாடும் Hunas Falls Hotelக்கு இந்த கூட்டாண்மை ஒரு முக்கியமான மைல்கல்லாகும். Hunas Falls Hotel இலங்கையின் மிகவும் அழகான சொத்து என்று நாங்கள் உண்மையிலேயே நம்புகிறோம். இதனடிப்படையில், விருந்தோம்பல் துறையில் 50 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், தொழில்துறையில் எப்போதும் அதிகரித்து வரும் ஆர்வத்துடன் செயல்படும் ஸெக்காவுடன் இணைந்து பணியாற்றுவது ஒரு பெருமையான விடயம் என நான் கருதுகிறேன்" என்றார். விருந்தோம்பல் துறையில் 5 தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்துடன், Forbes இதழில் நூற்றாண்டின் ஹோட்டலியர் (Hotelier of the Century) என்ற நன்மதிப்பு மிக்க அங்கீகாரத்தையும் பல பாராட்டுகள் மற்றும் தனித்துவமான வாழ்நாள் சாதனைகளையும் பெற்றுள்ள ஏட்ரியன் ஸெக்கா, விருந்தோம்பல் துறையில் ஒரு மூத்த முன்னோடி ஆவார். சொகுசு பூட்டிக் வில்லா கருத்தாக்கத்தின் முன்னோடியான இவர், இயற்கை அழகு, கட்டடக் கலை பாரம்பரியம், கலாசார பன்முகத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றை சிரமமின்றி தனது தனித்துவமான பாணியில், உலகம் முழுவதும் உள்ள பல்வேறு ஹோட்டல்களின் மூலம் இணைக்கிறார்.

# உள்ளத்தால் மாத்திரமே இறைவனை அடைய முடியுமென்று போதித்தவர் யோகர் சுவாமிகள்

**யோகர் சுவாமியின் 59ஆவது குருபூசை சில தினங்களுக்கு முன்னர் அனுஷ்டிக்கப்பட்டது. கருணையே வடிவான கடவுளைத் தன்னுள்ளே தொழுது அக்கடவுளர் கொண்ட அருட்திருமேனியான சற்குருவைப் போற்றி, செம்மை நலத்தைக் குறிக்கோளாகக் கொண்டு நலம்தருவகை–யில், மறப்பற்ற நீங்கா நினைவுடனிருக்கும் முறைமையை உணர்த்திய ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகள் ஆவார்.**

மனிதனானவன் தன்னை உணர்ந்து, மனத்தால் அந்நிலையை கடந்தால் மட்டுமே கடவுள் நிலையை உணர முடியும்' என உபதேசம் செய்தவர் சிவயோக சுவாமிகள் என்னும் சித்தர்.

யோக சுவாமிகள் பிறந்த சிவயோக சுவாமிகளின் குருபூஜைத்தினம் பங்குனி மாதத்து ஆயிலிய நட்சத்திரத்தில் அமைவதாகும்.

தம்குருவான விசர்ச் செல்லப்பாவெனும் சித்தர்வழி கிடைத்த மகாவாக்கியங்களான எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம், ஒரு பொல்லாப்பும் இல்லை, முழுவதும் உண்மை என்ற உபதேச வாக்கியங்களைத் தாமாகவே உணர்ந்து தெளிந்து அவற்றை மக்களுக்கும் போதித்துயர்ந்த தேசிகர் யோகர் சுவாமி.

இந்த நூற்றாண்டின் முதல் தசாப்தங்களில் நம்மிடையே வாழ்ந்து ஆன்மிக ஞானமுணர்த்திய கடையிற்சுவாமி, செல்லப்பா சுவாமிகளையடுத்து யாழ். கொழும்புத்துறைப் பதியிலுதித்த ஞானி 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி வைகாசி 18ஆம் நாள் இப்பூமியில் அவதரித்தார்.

அவர் பிறந்தபொழுது பல நற்சகுனங்கள் நிகழ்ந்ததென்றும் அவர் தீட்சை பெற்ற பின்னர் அரிய சித்துக்கள், திருவிளையாடல்கள் பலவற்றை பக்தர்கள் கண்முன்னே நிகழ்த்தினார் என்றும் பார்க்கிறோம். யாழ்ப்பணம் சாந்த பத்திரிசியார் கல்லூரியில் ஆங்கிலம், தமிழ் கற்றுத் தேறியவர் அவர்.

நல்லூரிலே ஞானதேசிகனாம் செல்லப்பா சுவாமிகளின் பார்வைபெற்று, தீட்சைபெற்ற குருநாதர் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் படிக்குந்தோறும் எம்மைப் பரவசப்படுத்தி, எம்மை இறையருள் பால் இட்டுச் செல்ல வல்லவை.

'என்னை எனக்கென்னாலே அறிவித்த எம்பெருமான்
அன்னையிலும் மிகவினிய ஆருயிர்க் குருதுணைவன்
பொன்னை நிகர்மேனியான் பூங்கமலத் திருத்தாளன்
தென்னை பனை சேரிலங்கை மாநகரிற் கண்டேனே'

என்று தம் ஞானகுருதேசிகன் செல்லப்பரைப் போற்றும் ஈழத்துச் சித்தர் பிரான், யாழ்ப்பாணத்துக் கொழும்புத் துறைப் பதியிற் பிறந்து 57 ஆண்டுகளின் முன் நம் மத்தியிலே நடமாடும் தெய்வமாகத் திகழ்ந்த பித்தராவார்.

'ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரிற்
பேசாதனவெல்லாம் பேசினான் கூசாமல்
நின்றேன் நீ யாரடா என்றே அதட்டினான்
அன்றே யான் பெற்றேனருள்'

என்று தன் குருவானவர் ஞான நிலையை தம் பாடல்களில் புலப்படுத்துகிறார் யோகர் சுவாமிகள்.



செல்லப்பரைக் கண்டதும் தன்னை மறந்தார் தன்னாமம் கெட்டார். அவரையே தன் தலைவனாகக் கொண்டவர் தம் பதவியை உதறித்தள்ளி, செல்லப்பரின் பின்னே திரிந்தார். பித்தர்போல ஆடை அணிகளை நோக்காது பிச்சையெடுத்து உண்பதும், தன்னை வந்தணுகும் பக்தர்களுக்கு ஆன்மிக போதனைகளை வாயினால் வழங்குவதுமாக இருந்தார்.

இது இவ்வாறிருக்க யோகரின் உறவினரும், சுற்றத்தவரும் அவரெங்கே எனத் தேடிவந்து செல்லப்பரை விசாரிக்க 'யோகநாதன் செத்துவிட்டான்' என பதில் வந்தது. சிவயோக சுவாமிகளின் ஞான சிந்தனைகளும் போதனைகளும் மக்களைக் கவர்ந்தன. 1935 களில் கொழும்புத் துறையில் ஆச்சிரமம் அமைத்து போதித்தவர் சிவத்தொண்டன் நிலையங்களை ஸ்தாபிக்க ஆணை தந்தார்.

செங்கலடி, யாழ்ப்பாணம், கொழும்பு_ 6 என்ற இடங்களில் அவரின் சிவதொண்டர் நிலையங்கள் இன்று யோகரின் வழிபாட்டில் நிறைகின்றன. 1964 பங்குனி ஆயிலிய நட்சத்திரத்தில் நடமாடும் பெருமான் யோகர் ஜீவசாமாதி எய்தினார்.



கலைமாமணி
எம்.எஸ். ஸ்ரீதயாளன்

# மாவிலாறு அல்லை விரிவாக்கல் திட்டமும் அதன் வரலாற்றுப் பின்னணியும்

அல்லை விரிவாக்கல் திட்டம் என்பது திருகோணமலை பிராந்தியத்தின் மூதூர் நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் இயங்குகின்ற ஒரே ஒரு பாரிய நீர்ப்பாசனத் திட்டம் ஆகும். 1957 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாக செயற்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட இத்திட்டம் இலங்கை வரலாற்றின் மிகப்பெரிய அணைக்கட்டுத் திட்டமாகும். இந்த அணைக்கட்டுத் திட்டத்தின் மூலம் சுமார் 20,000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் இருபோகங்களும் நீர்ப்பாசனம் பெற்று விளங்குகின்றன.

திருகோணமலை மாவட்டத்தின் சேருவில, மூதூர் மற்றும் வெருகல் பிரதேச செயலகப் பிரிவுகளுள் அடங்குகின்ற விவசாய நிலங்களுக்கே இத்திட்டத்தின் ஊடாக நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்படுகின்றன. இப்பாரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் 9,000 இற்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் நன்மையடைகின்றன.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொலநறுவை மாவட்டங்களின் எல்லைகள் சந்திக்கின்ற பகுதியிலே மாவிலாறு தலைமை வேலைத்தளம் அமைந்திருப்பது புவியியல் ரீதியாக விசேட அம்சமாகும். இலங்கையின் அதிமுக்கியம் வாய்ந்த சோமாவதி வனவிலங்குகள் சரணாலயத்தினுள் இந்த தலைமை வேலைத்தளம் அமைந்திருப்பது இதன் அமைவிடத்தை மேலும் சிறப்பிக்கின்றது. இந்த அமைவிடத்தைப் பார்வையிடுவதற்காக சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வருகை தருகின்றனர். இலங்கையிலே வேறெங்கும் காணமுடியாத அளவிற்கு மாவிலாறு தலைமை வேலைத்தளம் பல்வேறுபட்ட நோக்கங்களைக் கருத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்ட உட்கட்டமைப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

சுமார் 4000 ஏக்கர் பரப்பளவில் காணப்படுகின்ற மாவிலாறு நீரேந்து பிரதேசம் அங்கே வாழ்கின்ற வன விலங்குகளுக்கு பெரிதும் ஏற்றதாக அமைகின்றது. இந்த நீரேந்து பிரதேசம் சதுப்பு நிலங்களையும் புற்றரைகளையும் மற்றும் காடுகளையும் ஆங்காங்கே கொண்டுள்ளமை வன விலங்குகளின் வாழ்விடங்களுக்கு மிகவும் ஏதுவாக அமைகின்றது. இந்தச் சுற்றுச் சூழல் அமைப்பு இயற்கைச் சமநிலையுடன் ஒன்றி இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

## மகாவலி ஆற்றங்கரையில் இன்றும் மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வு நடவடிக்கைகள் அணைக்கட்டுப் பாதுகாப்புக்கு பெரும் சவால்

மாவிலாறு தலைமை வேலைத்தளம் அல்லை விரிவாக்கல் பாரிய திட்டத்திற்கு நீர்ப்பாசன வசதி வழங்குகின்ற அதேவேளை, மாவிலாறு பிரதேசத்திற்கு அந்த நீர் வசதி எவ்வாறு கிடைக்கப் பெறுகின்றது என்று ஆராய்வோம்.

மகாவலி நதி பொலநறுவை மாவட்டத்தின் கந்தக்காடு பகுதியில் கந்தக்காடு ஆறு மற்றும் வெருகல் ஆறு என இரு ஆறுகளாக வெவ்வேறாகப் பிரிந்து மாவிலாறு தலைமை வேலைத்தளத்தை சென்றடைகின்றது. இவ்வாறாகப் பெறப்படுகின்ற நீர்தான் அல்லை விரிவாக்கல் திட்ட பாரிய நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுகின்றது. மாவிலாறு தலைமை வேலைத்தளத்தில் தொழிற்படுகின்ற வெருகல் அணைக்கட்டு (சேறு அகற்றி), மாவிலாறு அணைக்கட்டு (ஆரைக் கதவு வான்) மற்றும் 1000 அடி வான் என்பவற்றின் ஊடாக செல்கின்ற மேலதிக நீர் வெருகல் ஆறு எனும் பெயருடன் வெருகல் மற்றும் இலங்கைத் துறை முகத்துவாரத்தில் கடலுடன் இணைகின்றது.



அல்லை விரிவாக்கல் திட்டம் தனது நீர்ப்பாசன வயல் நிலங்களை பாதுகாப்பதன் பொருட்டு மேலும் பல உட்கட்டமைப்புக்களை கொண்டுள்ளது. ஆதியம்மன்கேணி தொடக்கம் சூரங்கல் பாதை வரையாக அமைந்துள்ள 15 கி.மீ நீளமான மண்ணாலான வெள்ளத்தடுப்பு அணைக்கட்டு மகாவலி கங்கையில் ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கினைக் கட்டுப்படுத்தி அல்லை விரிவாக்கல் திட்டத்தின் விவசாய நிலங்களையும் சேருவில பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மூன்றாம் கொலணி, ஆதியம்மன் கேணி, கங்குவேலி, மேன்காமம், மல்லிகைத்தீவு, பெருவெளி, மூதூர் ஆகிய கிராமங்களையும் சேருவில பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தெஹிவத்த, நீலப்பொல ஆகிய கிராமங்களையும் இந்த மண்ணாலான அணைக்கட்டு பாதுகாத்து வருகின்றது. இந்த வகையான ஒரு கூட்டமைப்பினைப் பேணிப் பாதுகாத்து வருவது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மிக முக்கியமான கடமைகளில் ஒன்றாகும்.

இதுஇவ்வாறிருக்க மகாவலி ஆற்றங்கரையில் இன்றும் மேற்கொள்ளப்படுகின்ற மணல்அகழ்வு நடவடிக்கைகள் இந்த அணைக்கட்டுப் பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளன. மணல்அகழ்வு நடவடிக்கைகள் சட்டபூர்வமானவை என நியாயப்படுத்தப்பட்டாலும் அவற்றினை அகற்றுவதற்குப் பயன்படுத்துகின்ற போக்குவரத்து மார்க்கமாக இந்த அணைக்கட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். மணல் போக்குவரத்து மார்க்கமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இந்த மகாவலி வெள்ளத் தடுப்பு அணைக்கட்டினை பாதுகாக்கும் முகமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இன்னும் முழுமையாக வெற்றியடையவில்லை.



எந்திரி. எஸ். ராஜ்குமார்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்
நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை
அம்பாறை
IESL(Civil), M.Tech(IIT Roorkee), Dip.Irri.Eng(GITI), C.Eng, MIE(SL), AEng(ECSL)

அல்லை விரிவாக்கல் திட்டம் மகாவலி ஆற்றின் முடிவுப் பகுதியில் அமைந்துள்ள காரணத்தினால் மாரிகாலங்களில் வெள்ளப் பெருக்கு நிலைமைகளுக்கு அடிக்கடி ஆளாகின்ற அதேவேளை கோடை காலங்களில் போதியளவு நீர் கிடைக்கப் பெறுவதில்லை. இந்த இரு பிரச்சினைகளையும் தீர்க்கும் முகமாக முன்மொழியப்பட்டதுதான் மகாவலி வலயத்தின் அமைப்பு A அபிவிருத்தி (Development of System A). அந்த முன்மொழிவு பல்வேறு காரணங்களினால் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. அதனால் தான் அல்லை விரிவாக்கல் திட்டம் வெள்ளத்திற்கும் இடையிடையே வரட்சிக்கும் முகம் கொடுக்கின்றது.

வளைவு வடிவிலான மண்ணாலான அணைக்கட்டு (Earthen ring bund) மூலமாகவே தேவையான நீர் மட்டம் பேணப்பட்டது. எனினும் ஆற்றுநீரின் மட்டம் அதிகரிக்கின்ற பொழுது மண்ணாலான அணைக்கட்டு பெரும் சவாலை எதிர்கொண்டது. எது எவ்வாறாயினும் அல்லை விரிவாக்கல் திட்டம் வெள்ளப்பெருக்கினால் ஓரளவு பாதுகாக்கப்பட்டு வருகின்ற அளவுக்கு தொழில்நுட்ப கட்டமைப்புக்களுடன் கூடிய மறுசீரமைப்பு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி, மூதூர் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் பெருவெளி, மேன்காமம், கங்குவேலி, கிரான் எனும் கிராமியக் குளங்கள் 1957 இன் அல்லை விரிவாக்கல் திட்டத்துடன் இணைக்கப்பட்டு இன்றும் மகாவலி நீரைப் பெறுகின்ற குளங்களாக விளங்குகின்றன.





எஸ்.கஸ்ஸாலி
மூதூர் தினகரன் நிருபர்

# மாணவர்கள் க.பொ.த உயர்தர வகுப்பு அனுமதி பெறுவதற்கான அடிப்படைத் தகைமைகள்

**க.பொ.த உயர்தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக பல்வேறு சுற்றுநிருபங்கள் அடிக்கடி வெளியிடப்பட்டு மாணவர்களுக்கு போதிய விளக்கங்களையும் அறிவுரைகளையும் கல்வி அமைச்சு சுற்றுநிருபங்களை வெளியிட்டு தெளிவுபடுத்தியுள்ளது.**

அடிப்படைத் தகைமைகளாக பின்வரும் விடயத்தை நோக்கலாம்.

முதல்மொழி, கணிதம் உட்பட 3 திறமைச்சித்திகளுடன் ஏதாவது 6 பாடங்களில் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை (பூரண தகைமை) ஆகும்.

நிபந்தனைத் தகைமைகள் எனும் போது பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முதலாம் மொழி, கணிதம் உட்பட 2 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். அதாவது முதல்மொழி, கணிதம் தவிர்ந்த சாதாரண சித்தி பெற்ற ஒரு பாடத்தின் கணிப்பீட்டுப் புள்ளி (1.3 பெற்றிருத்தல்) அடிப்படையில் திறமைச்சித்தியாகக் கருதி உயர்தரம் கற்க அனுமதிக்கலாம். இரண்டாவது தடவையாக தோற்றியிருந்தாலும் முதலாம் தடவையின் கணிப்பீட்டுப் புள்ளியை இச்சந்தர்ப்பத்திற்குப் பயன்படுத்த முடியும்.

முதலாம் மொழி அல்லது கணிதம் இன்றி மூன்று திறமைச்சித்திகளுடன் ஐந்து பாடங்களில் சித்தி பெற்ற(3C, 2S) ஒரு மாணவனை அல்லது மாணவியை அதற்கு அடுத்த வருடம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் குறித்த தகைமையைப் பூர்த்தி செய்ய வெண்டும் என்ற நிபந்தனையுடன் உயர்தரம் கற்க அனுமதிக்க முடியும். குறிப்பாக சுற்றுநிருபம் 2014 இன்படி கணித பாடம் சித்தியின்றி அனுமதிக்கப்பட்ட மாணவர் அடுத்து வரும் இரு வருடங்களில் கணித பாடத்தில் சித்தியைப் பெற்றுக் கொடுக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

க.பொ.த சாராரணதரப் பரீட்சையில் சித்தி அடைந்தாலும் சரி, அடையாவிட்டாலும் சரி மேற்படி பகுதியில் சொல்லப்பட்ட மாணவர்களுக்கு 2017/37 இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி அதாவது தொழிற்பயிற்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி 'நிலைபேறான இலக்கை அடைவதற்கு நிறைந்த திறன்களால் வெல்வோம் தொழில்களை' எனும் தொனிப்பொருளில் கல்வி அமைச்சு 2017 ஆம் ஆண்டிலிருந்து திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.



பாடத் தெரிவுக்கான விஷேட தகைமைகளாவன...

உயர்தரத்தில் தமிழ்ப்பாடத்தைத் தெரிவு செய்வதாயின் க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ்ப்பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

உயர்தரத்தில் ஏதாவதொரு சமயம் அல்லது நாகரிக பாடத்தைத் தெரிவு செய்வதாயின் க.பொ.த சாதாரண தரத்தில் பரீட்சையில் தொடர்புடைய சமய பாடத்தில் திறமைச் சித்ததி பெற்றிருத்தல் வேண்டும்.

## எதிர்கால உலகுக்கான தெரிவுகள்

உயர்தரத்தில் சங்கீதம், நடனம், சித்திரம் மற்றும் நாடகமும் அரங்கியலும் பாடங்களுள் ஒன்றைத் தெரிவு செயவதாயின் சாதாரண தரத்தில் குறித்த பாடம் திறமைச் சித்தியாகக் கொள்ளப்பட வேண்டும் என சுற்றுநிருபம் கூறுகின்றது மற்றும் திமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பது நியதியாகும்.

பௌதிக விஞ்ஞானம் கற்பதாயின் சாதாரண தரத்தில் கணிதத்தில் திறமைச்சித்தியும் விஞ்ஞானத்தில் சாதாரண சித்தியையும் பெற்றிருத்தல் வேண்டும். அதாவது அடிப்படைத் தகமையுடன் இருத்தல்.

உயிரியல் விஞ்ஞானம் கற்பதாயின் சாதாரண தரத்தில் விஞ்ஞானத்தில் திறமைச்சித்தியுடன் கணிதத்தில் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் (அடிப்படைத் தகமையுடன் இருக்க வேண்டும்)

வர்த்தகப் பாடநெறியை கற்பதாயின் சாதாரண தரத்தில் பெற்ற மூன்று திறமைச் சித்திகளில் ஒன்று முயற்சியாண்மைக் கல்வி அல்லது வணிகக் கணக்கீடும் அல்லது வரலாறு பாடத்தில் பெற்றிருத்தல். இவையும் அடிப்படைத் தகமையுடன் இருத்தல் வேண்டும்.

தொழில்நுட்பப் பாடநெறியை மாணவர்கள் தொடர்வதாயின் சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அதாவது அடிப்படைத் தகமையுடன் இருத்தல் அவசியமாகும்.

எவை எப்படி இருந்தாலும் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதனைக் கருத்திற் கொள்ள வேண்டும். இவற்றினை மாணவர்களுக்கு அடிக்கடி தெளிவுபடுத்தி ஆலோசனைகள் கூறி வழிப்படுத்தல் வேண்டும்.

மேலும் முன்பு குறிப்பிடப்பட்டது போன்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தாலும் சித்தியடையாவிட்டாலும் மாணவர்கள் கவலை கொள்ளத் தேவையில்லை.

அவர்கள் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய சர்வதேச சந்தைக்குப் பொருத்தமான தொழில் பயிற்சி கற்கைநெறி அதாவது 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி இவை பற்றி கூறும் போது பொதுப் பாடத்துறை தரம் 12 முதலாம் தவணையில் 9 கட்டாய பாடங்கள் கற்க வேண்டும்.

மேற்படி மாணவர்கள் தளங்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு ஒன்றும் புரியாமல் திண்டாடுவது வழமை. எனவே அம்மாணவர்கள் மேற்குறித்த விடயங்களை அவதானித்து எதிர்கால சவால்களை எதிர்கொள்ள தங்களுக்குப் பொருத்தமான துறையை தெரிவு செய்து கொண்டு கல்வி கற்க முடியும்.

கலைச்சுடர்
நாராயணபிள்ளை நாகேந்திரன்
(ஓய்வு பெற்ற அதிபர்)
களுவாஞ்சிகுடி

# பண்டிகைக் காலங்களில் தட்டுப்பாடுகளை தவிர்க்க இறக்குமதித் தடையை நீக்கவும்

## அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பண்டிகைக் காலங்களில் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில், இறக்குமதிக்கு தடைசெய்யப்பட்டுள்ள சில உணவுப் பொருட்களுக்கான தடையை நீக்குமாறு கோரப்பட்டுள்ளது.வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவிடம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதிச் சங்கத்தினர் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர். இச்சங்கத்தின் பேச்சாளர் அதுதொடர்பில் தெரிவிக்கையில், பண்டிகைக் காலங்களில் பெருமளவு தேவைப்படும் சிவப்புச் சீனி, பாசிப்பயறு, உளுந்து, மஞ்சள் மற்றும் குரக்கன் போன்ற உணவுப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடையை நீக்குமாறு அமைச்சரைக் கேட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

உள்ளூர் விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கில் கடந்த காலங்களில் மேற்படி உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடையை நீக்கி, அந்த உணவுப்பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வரி அறவீட்டை மேற்கொள்ளுமாறும் அந்தச் சங்கத்தினர் அமைச்சரைக் கேட்டுள்ளனர்.

இவ்வாறு செயற்படாவிட்டால், பண்டிகைக் காலங்களில் அத்தகைய பொருட்களுக்கான கறுப்புச் சந்தை மாபியாவை கட்டுப்படுத்த முடியாமற் போகும் என்றும் அவர்கள் அமைச்சருக்கு தெளிவுபடுத்தியுள்ளனர்.

# சத்துரு சம்ஹார ஹோமம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் கடவுளான சிவ பரம்பொருளால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவ ராசிகளினுள்ளும் சிவத்தை பேணும் தவத்தையுடையது மானிடப் பிறவி. இப்பிறவியில் மனிதன் இன்பம் துன்பம் சத்துரு மித்துரு முதலானவைகளால் கட்டுண்டு அவதிப்படுகிறான். உலகில் இருக்கிற எந்தவொரு மனிதனுக்கும் நேரடி அல்லது மறைமுக எதிரிகள் அறவே இல்லை என்பதை நிச்சயமாக கூறமுடியாது. நம் சொந்த திறமையின் காரணமாக பொருளாதார வளர்ச்சி, புகழ் போன்றவற்றை நாம் அடைவதை சிலரால் பொறுத்துக்கொள்ள முடியாமல் நம்மை அழிப்பதற்கு நேரடியாக சில முயற்சிகளை செய்கிறார்கள்.

ஆணவம், கன்மம், மாயை என்பவற்றால் ஏற்படும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் ஆகிய அறுவகை உட்பகைகளும் துஷ்டம், கஷ்டம், சோகம், ரோகம் முதலான வெளிப்புற பகைகளாலும் தினமும் அவதிப்பட்டு உழலுகின்றவர்களுக்கு நற்கதியை வழங்க அவதாரம் எடுத்தவர் முருகப்பெருமான் ஆவார். தேவர்களுக்கு தொல்லை தந்துகொண்டிருந்த சூரபத்மன் மற்றும் அவனின் அரக்கர் படையை அழிப்பதற்காக சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து அருவமும் உருவமுமாய் அநாதியாய் பலவாய் ஒன்றாய் பிரம்மமாய் நின்ற பிழம்பு அதுவோர் மேனியாக கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகனாக வந்து உதித்தருளினார்.

சண்முகப்பெருமான் என அழைக்கப்படும் ஆறுமுக சுவாமிக்கு சிவ பஞ்சாட்ஷர மந்திரத்துடன் ஷடாட்ஷர மந்திரத்தையும் இணைத்து அதற்குரிய பீஜாட்ஷர மந்திரங்களால் வழிபாடுகள் செய்வது சிறப்பம்சமாகும். முக்தி தருவதும் சந்தக் கவி என புகழப்பட்ட அருளாளர் அருணகிரிநாதருக்கு முருகப்பெருமான் வேல் கொண்டு நாவில் பிரணவத்தை எழுதி “முத்தைத் தரு” என அடி எடுத்து கொடுத்து திருப்புகழை பாட செய்தார். பால தேவராஜன் அடியார்களுக்கு அருள்புரிந்து இயற்றிய கந்தசஷ்டி கவசத்தில் “பொல்லாதவரை பொடிப் பொடியாக்கும், நல்லோர் நினைவில் நடனம் புரியும், சர்வ சத்துரு சங்காரத்தடி அறிந்தெனதுள்ளம்” என முருகப்பெருமானின் அவதார சிறப்பம்சங்களை கூறுகிறார். அந்த சத்ருவாகிய உட்பகைகளும், பஹிர்சத்ருவாகிய வெளிப்புறப் பகைகளும் நீங்க முருப்பெருமானை வழிபடுதல் வேண்டும்.

தீய சக்திகளிடமிருந்து நம்மைக் காத்து நன்மைகளை அருளக்கூடியவர் முருகப்பெருமான். தூய அன்பின் அடையாளமாக திகழும் இவர் எதிரிகளை வெற்றிகொள்ள உதவுவார். நம்மை பாதுகாக்கும் சக்திவாய்ந்த கவசமாக விளங்குபவர் முருகப்பெருமான் ஆவார். இச்சிறப்பு மிக்க முருக வழிபாடுகளில் மிக முக்கிய பூஜை வழிபாடு சத்துரு சம்ஹார ஹோமம் ஆகும். இச் சத்துரு சம்ஹார ஹோமத்தின் மூலம் தெய்வ சாபங்கள், நவக்கிரக தோஷங்கள், பித்துரு சாபங்கள் நீங்கவும் எமது கர்மா வினைகளை தீர்த்துக்கொள்ளவும் வழிபிறக்கும். கண்திருஷ்டி, பயம், மனச்சோர்வு, நோய்கள், கடன்தொல்லைகள்போன்றவற்றிலிருந்து விடுதலை கிடைக்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கவும் குடும்ப உறவுகள் மேம்படவும் உதவும். தொழிலில் ஏற்படும் போட்டிகளில் வெற்றிகளை காணவும் உதவுவதோடு வழக்குகள் போன்றவற்றிலிருந்தும் விடுதலை கிடைக்கும். அரசு, அரசியல், இராணுவம் மற்றும் காவல்துறை போன்றவற்றில் ஏற்படும் பகைமைகளை வெற்றிகொள்ள வழிபிறக்கும். இவ்வாறு சிறப்பு மிக்கதும் உன்னதுமுமான சத்துரு சம்ஹார ஹோமத்தை தனிப்பட்ட முறையில் வீடுகளில் செய்வதை விட முருகப்பெருமானின் ஆலயங்களில் செய்வதால் விரைவாகவும் சிறந்த பலன்களையும் பெறலாம். இவ்வாறு பல சிறப்பம்சங்களை கொண்ட இம்மகா யாகம் தலைநகர் கொழும்பில் ஸ்ரீ கதிரேசன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயிலில் கடந்த 26.03.2023 முதலாக 10 தினங்கள் நடைபெறும் இலட்ச நாமார்ச்சனையை தொடர்ந்து நாளைய பங்குனி உத்தர நன்னாளான 05.04.2023 புதன்கிழமை காலை 7 மணிமுதல் நடைபெற திருவருள் கூடியுள்ளது. ஆகம விதிப்படி இச் சத்துரு சம்ஹார ஹோமம் 6 தலைசிறந்த சிவாச்சாரியர்களால் உன்னதமான சர்வசாதகாச்சார்யார்கள் வேதம் ஓத சிறப்பாக பக்திசிரத்தையுடன் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து அடியார்களும் இதில் கலந்து தங்களின் துன்பங்களையும் துயரங்களையும் களைவதுடன் தங்கள் வாழ்வில் உள்ள தடைகள் நீங்கி எதிரிகளை வென்று நல்வாழ்வு வாழவும் தங்களின் வேண்டுதல்கள் விரைவில் நிறைவேறவும் எல்லாம் வல்ல வள்ளி தேவசேனா உடனுறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியினை வழிபட வேண்டுகிறோம். இங்கு நடைபெறும் சத்துரு சம்ஹார ஹோமத்தில் கலந்துகொள்ளும் அடியார்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்படுவதுடன் இம் மகா யாகத்தில் அர்ச்சிக்கப்பட்ட சுப்பிரமண்ய யந்திரமும் வழங்கப்பட்டு காப்பு கட்டப்படும்.

## கொழும்பு வெள்ளவத்தை ...

அதேவேளை, நில அதிர்வுகள் தொடர்பான புதிய பரிசோதனை உபகரணங்களை பொருத்தி, கொழும்பை அண்டிய பகுதிகளில் இடம்பெறும் பூமி அதிர்வுகள் தொடர்பில் துரித கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார். அவ்வாறு செயற்படும்போது கொழும்பை அண்டிய பிரதேசங்களின் நிலைமைகளை அறிந்து கொள்ள முடியும் என தெரிவித்துள்ள அவர், பயப்பட வேண்டிய நிலை காணப்படவில்லை என்றும், எனினும் ஆய்வுகளை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் அரசியல்...

ஆண்டு மே மாதம் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த யாழ். வேலணையைச் சேர்ந்த இ. திருவருள், யாழ். கரவெட்டியைச் சேர்ந்த ம. சுலக்ஷன், முள்ளியவளையைச் சேர்ந்த க. தர்ஷன் ஆகிய மூவருமே இவ்வாறு நேற்று (03) விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேற்படி மூவருக்கும் எதிரான வழக்கு விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. இந்நிலையில் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமையால் மூவரையும் அனைத்துக் குற்றச்சாட்டுகளிலுமிருந்தும் விடுதலை செய்வதாக தீர்ப்பினை வழங்கிய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்திற்கு எதிராக சதித்திட்டம் தீட்டினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. அந்தவகையில் அவர்கள் ஏற்கனவே வழங்கியிருந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்மானித்தது. அதனைத் தொடர்ந்து சுயாதீன சாட்சிகள் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன. இதன்போது, அந்த சாட்சியங்கள் அவர்களது குற்றத்தை நிரூபிப்பதற்கு போதுமானதாகவில்லை என்ற காரணத்தினால் அனைத்துக் குற்றங்களிலிருந்தும் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மிக நீண்டகாலம் தடுப்புக் காவலிலிருந்த அரசியல் கைதிகளின் வழக்காக இந்த வழக்கு காணப்படுகிறது. நேற்று விடுதலையான மூவரும் நீதிமன்றத்திற்கு வருகை தந்திருந்த தமது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியை பரிமாறியதுடன் தமது விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டனர்.


Capitaltrust
Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

**Investors appear to be on the sidelines due to the upcoming holidays... Tourist arrivals pickup strongly in March 2023...**

**Daily Market Watch**
03rd April 2023

**Market Commentary**

Expo Lanka Holdings gained LKR 9.25 on last Friday's announcement of their acquisition of Locher Evers International Inc and its group companies in Canada for a purchase consideration of approximately LKR 22 Bn. Selling has dried up as indicated by today's significantly low turnover of LKR 570 Mn as investors appeared to be on the sidelines due to the upcoming holidays given that most people did not have the opportunity to travel during the last four years due to Covid and the economic crisis. Meanwhile, the country has experienced a strong pickup in tourist arrivals, with 125,495 arrivals recorded in March 2023, up 17.8% compared to March 2022. This is a positive development for the tourism industry as well as the wider economy and should have a positive impact on foreign reserves.

**Market Performance**

| | 03.04.2023 | 31.03.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,236.9 | 9,301.1 | -0.69 |
| S&P SL 20 Index | 2,676.5 | 2,682.8 | -0.24 |
| Turnover (LKR mn) | 570.0 | 4,268.7 | -86.6 |
| Foreign Purchases (LKR mn) | 17.7 | 66.3 | -73.3 |
| Foreign Sales (LKR mn) | 12.2 | 2,600.2 | -99.5 |
| Market Cap (LKR bn) | 3,896.5 | 3,903.5 | -0.2 |
| Market Cap (US$ bn) | 11.9 | 11.9 | -0.2 |
| Traded Companies | 241 | 238 | 1.3 |
| Market PER (x) | 5.0 | 5.0 | -0.2 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 0.0 |
| Dividend Yield (%) | 4.1 | 4.0 | 0.2 |

**Top Gainers and Losers (%)**




**Relative Strength Index (RSI)**




**Contributors to ASPI**




**Turnover Breakdown**




**Key Rates**

| | 03.04.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 21.40% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 24.31% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.30% |

**Market Benchmarks**




**Largest Trades**




**Corporate News**

CASH DIVIDENDS

First Capital Treasuries PLC (FCT) - LKR 1.50. XD date – 17.04.2023.Ceylon Tobacco Company PLC (CTC) - LKR 20.30. XD date – 29.05.2023.

United Motors Lanka PLC (UML) - LKR 1.00. XD date – 02.05.2023.

The Lanka Hospitals Corporation PLC (LHCL) - LKR 1.50. XD date – 04.04.2023.

Balangoda Plantations PLC (BALA) - LKR 2.00. XD date – 04.04.2023.

Overseas Realty (Ceylon) PLC (OSEA) - LKR 1.25. XD date – 27.04.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date – 06.06.2023

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*


# பெருந்தோட்ட மாணவர்களுக்கு இந்திய அரசின் புலமைப்பரிசில்

**விண்ணப்பங்கள் கோரல்**

லோரன்ஸ் செல்வநாயகம்

மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று இந்திய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அப்பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

க.பொ.த உயர்தரம், தொழில்நுட்ப கல்லூரி பட்டப்படிப்பு மற்றும் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி, க.பொ.த சதாரண தரத்தில் சித்தியடைந்துள்ள மாணவர்களில் (ஆகக்குறைந்தது ஆறு பாடங்கள்) 25 வயதுக்குக் குறைவானவர்கள் இப்புலமைப் பரிசில்களுக்காக விண்ணப்பிக்க முடியுமென இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. விண்ணப்பத்தை www. hcicolombo.gpv.in இணைய தளத்தில் தரவிறக்கம் செய்யமுடியுமென்றும் அல்லது இந்திய உயர் ஸ்தானிகராலயம், இலக்கம் 36 38, காலி வீதி, கொழும்பு 03 மற்றும் இந்திய உதவி உயர் ஸ்தானிகர் அலுவலகம் 1A, மகாமாயா மாவத்தை, த.பெ. இலக்கம் 47, கண்டி ஆகிய முகவரிகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை பிறப்புச் சான்றிதழ், புகைப்படம், க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தர சான்றிதழ் பத்திரம் பெற்றோர்களின் புதிய சம்பளச்சீட்டு மற்றும் பெற்றோர்களின் தொழில் ஆகியவற்றை தோட்ட அதிகாரியின் சான்றுப்படுத்தலோடு சமர்ப்பிக்கப்படவேண்டுமென்றும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை செயலாளர், இந்திய உயர்ஸ்தானிகராலயம், த.பெ. இலக்கம் 882, கொழும்பு 03 என்ற முகவரிக்கு இம் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# ஜெல்வடிவில் உருக்கி தங்கம் கடத்தல் நால்வர் கைது, ஏழு கிலோ பறிமுதல்



பல கோடி ரூபாப் பெறுமதியான தங்கத்தை வெளிநாட்டுக்கு கடத்த எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது. இதனுடன் தொடர்புபட்ட நான்கு பேரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை விமான நிலையத்தில் கைதாகினர்.

விமான நிலைய பாதுகாப்பு பிரிவினர் மற்றும் சுங்க அதிகாரிகள் இணைந்து இவர்களது கடத்தல் முயற்சியை முறியடித்தனர்.

இதில்,வரியில்லா வர்த்தக நிலையம் ஒன்றின் முகாமையாளரும் கைது செய்யப்பட்டிருந்தார். இந்நகைகள், ஜெல் வடிவிலாக்கப்பட்டு பார்சல்களில் அடைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வெளிநாடு ஒன்றிலிருந்து வந்த பயணி ஒருவர், இந்த தங்க கையிருப்பை, பயணிகள் பரிமாற்று பகுதியிலுள்ள குறித்த வரியில்லாத வர்த்தக நிலையத்தின் முகாமையாளரிடம் கொடுத்துள்ளார். பின்னர் அந்த முகாமையாளர் அதனை நாட்டுக்குள் கடத்திச் செல்ல முற்பட்டபோதே, கைது செய்யப்பட்டார். இதையடுத்து இதனுடன் தொடர்புடைய இன்னுமொருவரும் கைதானார். சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட ஏனைய இரவைரும் இந்திய பிரஜைகளாவர். இவர்களிடமிருந்து ஏழு கிலோ தங்கமும் கைப்பற்றப்பட்டது.இத் தங்கம், துபாய் அல்லது சிங்கப்பூரிலிருந்து கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது. கையிருப்பு ஆய்வுக்கு இத்தங்கம் அனுப்பப்படவுள்ளது.

## மேன்முறையீட்டையடுத்து...

இதற்கு எதிராகத் ராகுலுக்கு அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கின் தீர்ப்பு மார்ச் 23 இல் வெளியானது.

இதில், ராகுல் காந்தியின் எம்பிப் பதவியை வறிதாக்கிய குஜராத் நீதிமன்றம் இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனயையும் விதித்திருந்தது. எனினும் இதை, எதிர்த்து ராகுல் காந்தி மேன்முறையீடு செய்திருந்தார்.

இவரது இம்மேன் முறையீட்டை விசாரித்த நீதிமன்றம் ராகுலுக்கு பிணை வழங்கியதுடன், இம்மாதம் 14 இல், இவ்வழக்கை விசாரிப்பதற்கும் தீர்மானித்தது.

## புத்தாண்டு சுபநேரப்...

(03) முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. பாரம்பரிய முறைப்படி மேளதாளத்துடன் கொண்டுவரப்பட்ட சுபநேரப் பத்திரத்தை, புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

வளர்பிறை தரிசனம், பழைய ஆண்டிற்கான நீராடல், புத்தாண்டுப் பிறப்பு, புண்ணியகாலம், உணவு சமைத்தல், சுப காரியங்களை ஆரம்பித்தல், கைவிசேடம் பெறுதல், உணவு உண்ணுதல், தலைக்கு மருத்துநீர் வைத்தல், தொழிலுக்காக புறப்படுதல், மரம் நடுதல் போன்ற சுப நேரங்கள் இதில் அடங்குகின்றன..

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, மேலதிக செயலாளர் திலக்நந்தன ஹெட்டியாரச்சி, பணிப்பாளர் (ஊக்குவிப்பு) கலாநிதி பிரசாத் ரணசிங்க, கலாசார அலுவல்கள் பணிப்பாளர் பாக்யா சி. கட்டுதெனிய உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வருடத்தின் முதல்...

அரசாங்க ஊழியர்களுக்கான ஏப்ரல் மாத சம்பளத்தை இம்மாதம் (10) க்கு முன்பதாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், அரசாங்க ஊழியர்கள் என்ற வகையில் நாட்டின் தலைவரான ஜனாதிபதியும் அரசாங்கமும் அவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியே செயற்பட்டுவருகின்றனர்.

பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள பல்வேறு நாடுகள், அந்த நிலையை சீர்செய்வதற்காக முதலில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் கைவைக்கவே முற்படுகின்றன. எமது நாட்டில் அவ்வாறான எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. பணவீக்கம் மற்றும் வரி அதிகரிப்பு காரணமாக அரசாங்க ஊழியர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளனர் என்பதை நாம் அறிவோம்.

ஏப்ரல் மாதத்தில் எமக்கு பெருமளவு நிதி சுமை ஏற்படுகிறது. வழமையாகவே மாதத்தின் இறுதியில் 25 ஆம் திகதியில் அவர்களுக்கான சம்பளம் வழங்கப்படும். எனினும், ஏப்ரல் மாதத்தில் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு 10 ஆம் திகதிக்கு முன்பதாக அவர்களுக்கு சம்பளம் வழங்குவதாக அரசாங்கம் பெரும் நிதிச் சுமையை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அதே போன்று ஓய்வூதியம் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவுகளையும் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்பதாக வழங்க வேண்டியுள்ளது.

நிதி முகாமைத்துவம் செய்யப்பட்டு அதனை வழங்கியே ஆக வேண்டுமென ஜனாதிபதியும் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் போது இந்த வருட இறுதியில் அரசாங்க ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்குவதாக ஜனாதிபதி கூறியிருந்தார். எனினும் இந்த வருடத்தின் முதல் காலாண்டு நிறைவடைவதற்குள் விசேட கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மிதந்து வந்த...

சோதனையிட்ட படையினர், நான்கு பார்சால்களாகப் பொதி செய்யப்பட்டிருந்த ஐஸ் போதைப் பொருட்களைக் கைப்பற்றினர்.

இதன் அண்ணளவான பெறுமதி 67.5 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாகுமெனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.சட்ட நடவடிக்கைகளுக்காக உரியஅலுவலகத்துக்கு இவற்றை ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## சுகாதாரத் துறை...

சுகாதாரத் துறையின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை.எனினும், இன்னும் ஒரு மாத காலத்திற்கு தீர்வைப்பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, இன்று (04) பாராளுமன்ற அமர்வின்போது அந்த சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்படமாட்டாது. பிறிதொரு தினத்தில் அந்த சட்டமுலம் பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை இந்திய...

இடம்பெறும் இந்த பயிற்சி எதிர்வரும் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சிகள் இரண்டு கட்டங்களாக நடைபெறுகிறது. இதன் முதலாவது கட்டம் கொழும்பு துறைமுகத்தை மையமாகக் கொண்டு நேற்று முதல் எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை நடைபெறும். இரண்டாம் கட்டப் பயிற்சி எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை கொழும்பு கடற் பகுதிக்கு அப்பாலுள்ள கடலில் இடம்பெற்றுள்ளதாக

கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கைவிடப்பட்ட...

டொலரை வழங்கியிருந்தது.

கடந்த மார்ச்சி 31 முதல் இப்பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இதற்கென 11 மாவட்டங்களிலிருந்து சுமார் 497 குளங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் எழுபத்தி இரண்டு குளங்களும், அநுராதபுரம் மாவட்டத்தில் 29 குளங்களிலும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மார்ச் 31ஆம் திகதி கோமரன்கடவல திவுல்வெவ மற்றும் பலுகஸ்வெவ புனரமைப்புப் பணிகளை அமைச்சர் பார்வையிட்டார்.

## அனைத்துப் பல்கலைக்கழக...

காரணமாக அப்பகுதியில் அன்றாட நடவடிக்கைகள் பாதிப்படைந்தன. ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக பொலிசார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

பல்கலைக்கழகங்களில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள பிடியாணை, பாலி பல்கலைக்கழகம் மூடப்பட்டமை, பேராதனை மற்றும் ருஹுணு பல்கலைக்கழகங்களில் இடம் பெறும் பிரச்சனைகளுக்கும் தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## பாடசாலைக்கு இன்று... 03ஆம் பக்கத் தொடர்

மேலும், மே 13 முதல் மீண்டும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

முதல் தவணையின் மூன்றாம் கட்டம் மே 25ஆம் திகதி தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டமா அதிபரின் மனுவை... 03ஆம் பக்கத் தொடர்

முதலிகே நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க நீதிமன்றத்துக்கு விடயங்களை முன்வைத்தார்.

உடனடி சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்காக மட்டும் நேற்றைய தினம் மேற்படி மனுவை விசாரணைக்கு எடுக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.அதற்கிணங்க வழக்கோடு சம்பந்தப்பட்ட எழுத்துமூல ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, மேற்படி மனுவை ஜூன் 01 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாத ஒழிப்பு செயலகத்தின் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு ஒன்றை சட்டடமா அதிபர் தாக்கல் செய்திருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட வசந்த முதலிகே போதியளவு சாட்சிகள் இல்லை.இதனால், அவரை விடுதலை

செய்வதற்கு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் மேற்கொண்ட தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என்றும் அவர் தனது மனுவில் தெரிவித்திருந்தார்.இதற்கமையவே அந்தத் தீர்மானத்தை நிராகரிக்குமாறு கோரி சட்டமா அதிபர்,மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்தமுதலிகே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண இலக்கிய விழாவுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

**ஒலுவில் விசேட நிருபர்**

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இந்த வருடத்துக்கான (2023) மாகாண இலக்கிய விழாவை நடத்தவுள்ள நிலையில், இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸநாயக்கா அறிவித்துள்ளார்

இலக்கியப் படைப்பு விருது வழங்கலுக்காக கடந்த 2022ஆம் ஆண்டு பிரசுரமாகிய சிறந்த நூல்கள், குறும் திரைப்பட ஆக்கங்கள் தெரிவு செய்யப்படவுள்ள நிலையில், கிழக்கு மாகாண எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் தயாரிப்பாளர்களும் தமது படைப்புகளைச் சமர்ப்பிக்க முடியும்.



கிழக்கு மாகாணத்தில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இலக்கிய கர்த்தாக்கள், கலைஞர்கள், துறைசார் வல்லுநர்கள் இவ்விருதுக்காக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் கடந்த 31.12.2022ஆம் திகதியன்று 50 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் வெளியீடு செய்த நூல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதுடன், நூல்களை வழங்குவதற்கு விரும்பும் வெளியீட்டாளர்கள், உரிய விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து நான்கு நூல் பிரதிகளுடன் அனுப்பி வைக்குமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், விண்ணப்பப்படிவங்களை கிழக்கு மாகாணத்தின் சகல பிரதேச செயலகங்களிலும் மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் தமது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னராக மாகாணப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

# அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறிய இருவருக்கு அபராதம்

**பாலமுனை தினகரன் நிருபர்**

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தின் உரிமையாளருக்கும் டிப்பர் வாகனத்தின் உரிமையாளருக்கும் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா நேற்று திங்கட்கிழமை (03) அபராதம் விதித்துள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தையும் டிப்பர் வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து, கைப்பற்றப்பட்ட வாகனங்களுடன் இவர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, இந்த அபராதத்தை நீதவான் விதித்துள்ளார்.

இந்நிலையில், உழவு இயந்திர உரிமையாளருக்கு 10,000 ரூபாவையும் டிப்பர் வாகனத்துக்கு 20,000 ரூபாவையும் நீதவான் அபராதமாக விதித்துள்ளார்.

# சம்மாந்துறை வாய்க்கால்களை சுத்தப்படுத்த வேண்டுகோள்

**சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்**



அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட கல்லரிச்சல் பகுதியிலுள்ள வாய்க்கால்கள் நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாமல் காணப்படுவதனால், தாம் சுகாதார ரீதியாக பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக, கல்லரிச்சல் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச வாய்க்கால்களில் குப்பைகள் அடைத்துக் காணப்படுவதுடன், நீர் தேங்கியும் நிற்கின்றது. இதனால், துர்நாற்றம் வீசுவதுடன், நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுவதாகவும், அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தமது சுகாதார நலனைக் கருத்தில் கொண்டு வாய்க்கால்களை துப்புரவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அம்மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### இஸ்ரேலிய சபாநாயகர் புதுடில்லி விஜயம்

# யூத எதிர்ப்பை வெளிப்படுத்தாத நாடு என இந்தியாவுக்கு புகழாரம்

இந்தியாவில் யூதர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வந்துள்ளனர். யூத எதிர்ப்பு மனப்பான்மையின்றி யூதர்களை அரவணைத்து வந்துள்ள ஒரே நாடாக இந்தியாவைக் குறிப்பிடலாம். இதற்காக நாம் இந்தியாவுக்கு நன்றியுடையவர்கள்.

இந்தியாவுக்கு வருகை தந்துள்ள இஸ்ரேலிய பாராளுமன்ற சபாநாயகர் அமிர் ஒபானா இவ்வாறு இந்தியாவை பாராட்டி பேசியுள்ளார்.

கடந்த 31ஆம் திகதி புதுடில்லிக்கு இந்திய பாராளுமன்றத்தின் இரு அவைகளின் அழைப்பின் பேரில் விஜயம் செய்த இஸ்ரேலிய சபாநாயகர், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடும் இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடுமான இந்தியாவுக்கு தன் முதல் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருப்பது மகிழ்வைத் தருவதாக குறிப்பிட்டிருந்தார். இந்திய பாராளுமன்ற சபாநாயகர் ஓம் பிர்லாவை சந்தித்த அவர், சபாநாயகர் என்ற அளவில் வெளிநாட்டுக்கு விஜயம் செய்யத் தீர்மானித்தபோது இந்தியா கைநீட்டி அழைத்ததாகவும், பல்துறைகளில் எழுச்சி பெறும் நாடாக இந்தியா விளங்குவதாகவும் தெரிவித்தார்.

உலகளாவிய சவால்களுக்கு, இரு பாராளுமன்றங்களும் தமது சிறந்த செயல்பாடுகள், தொழில்நுட்பத்திறன் மற்றும் அனுபவங்களை பகிர்ந்துகொள்வதன் மூலம் முகம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஓம்பிர்லா, இரு நாடுகளுக்கு இடையிலான உயர்மட்ட விஜயங்கள் இரு தரப்பு உறவுகளை மேம்படுத்தும் என நம்பிக்கை வெளியிட்டார்.

இரு நாடுகளும் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் பல விடயங்களை அறிந்துகொள்ள முடியும் என்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியின் பலன்களை அறுவடை செய்யக் கூடும் எனவும் இஸ்ரேலிய சபாநாயகரிடம் ஓம்பிர்லா மேலும் சுட்டிக் காட்டியிருந்தார்.

# திருகோணமலையில் மகளிர் தின நிகழ்வு

**கந்தளாய், கிண்ணியா தினகரன் நிருபர்கள்**



'பெண்மையை போற்றுவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் சர்வதேச மகளிர் தின நிகழ்வும் மகுடம் வழங்கும் ஸ்ரீரஞ்சனியின் 'ஒன்றே வேறே' சிறுகதை நூல் வெளியீடும் திருகோணமலை குளக்கோட்டம் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை (01) நடைபெற்றது.

திருகோணமலை 'அன்பின் பாதை சமூகம்' மற்றும் 'எண்ணம் போல் வாழ்க்கை' எனும் அமைப்புகள் இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

இதன்போது, திருகோணமலையில் பல்துறைகளிலும் சிறந்து விளங்கிய 19 மாதர்கள் மதிப்பளிக்கப்பட்டு, அவர்கள் சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை, அன்பின் பாதை சமூக அமைப்பின் நிறுவுனர் றொஸில்டா அன்டனின் சமூக சேவைகளைப் பாராட்டி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

'ஒன்றே வேறே' சிறுகதை நூலின் முதல் பிரதியை தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி பெற்றுக்கொண்டார்.

# மரை இறைச்சியுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

**தோப்பூர் குறூப் நிருபர்**

சட்டவிரோதமான முறையில் மரை இறைச்சி வைத்திருந்த இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா படி அபராதத்தை மூதூர் நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரியமான்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த இந்த இருவரையும் மரை இறைச்சி வைத்திருந்தமை தொடர்பாக பொலிஸார் கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து மரை இறைச்சியையும் கைப்பற்றினர்.

ஒருவரிடமிருந்து 1,450 கிராம் மரை இறைச்சியையும் மற்றையவரிடமிருந்து 1,350 கிராம் மரை இறைச்சியையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து, இந்த இருவரையும் மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை (03) ஆஜர்படுத்திய போதே, இந்த விளக்கமறியல் உத்தரவை நீதவான் பிறப்பித்துள்ளார்.

# மருதமுனையில் இலவச அரிசி விநியோகம் ஆரம்பம்



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனைப் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள், காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்கள், விசேட தேவையுடையோர், முதியோர்கள் ஆகியோருக்கே மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்காக 20 கிலோகிராம் அரிசி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

கல்முனைப் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியின் பணிப்புரைக்கமைய மருதமுனை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் ஏ.எல்.எம்.நஜீப்பின் வழிகாட்டலின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் மருதமுனை முதலாம் பிரிவில் 182 குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

### பூட்டான் மன்னர் புதுடில்லி விஜயம்

# இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்பெறுமென நம்பிக்கை

இந்திய ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் புதுடில்லிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பூட்டான் மன்னர் ஜிக்மே கேசர் நம்கயல் வாங்சுக்கின் மூன்று நாள் பயணம், இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் என்றும் சில துறைகளில் மேம்பாட்டுக்கு இந்தியா, பூட்டானுக்கு உதவும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னருடன் பூட்டான் வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சர் தண்டி ஜோர்ஜி மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் புதுடில்லி வந்துள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை அபிவிருத்தி செய்வது, பொருளாதாரத் துறையில் இணைந்து செயல்படுவது, விண்வெளித் துறை, திறன் விவசாயம், பசுமை மின்சாரம், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, திறன் விவசாயம், பசுமை மின்சாரம், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, டிஜிட்டல் அபிவிருத்தி ஆகியவற்றில் இந்திய உதவிகளை பெற்றுக்கொள்வது என்பனவற்றில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என, இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரியில் பூட்டான் தேசிய சபை சபாநாயகரின் தலைமையில் புதுடில்லி வந்த குழுவினர், ஜனாதிபதி முர்முவை சந்தித்து உரையாடியபோது அவர் மன்னரை இந்தியாவுக்கு வரும்படி அழைப்பு விடுத்திருந்தார்.

வருகை தந்திருக்கும் மன்னர், ஜனாதிபதியையும் பிரதமர் நரேந்திர மோடியையும் சந்தித்து பேசுவார். இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு உடன்படிக்கை 1949ஆம் ஆண்டு கைச்சாத்தானது. 2007ஆம் ஆண்டு இந்த உடன்படிக்கை மீளவும் புதுப்பிக்கப்பட்டது.

# ஆலையடிவேம்பில் இரத்ததான நிகழ்வு



**வாச்சிக்குடா விசேட நிருபர்**

'உதிரம் கொடுப்போம், உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்புப் பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை (03) இரத்ததான நிகழ்வொன்று நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்தம் தேவைப்படும் காரணத்தால் இந்த இரத்ததான நிகழ்வு நடத்தப்பட்டது.

ஆலையடிவேம்புப் பிரதேச செயலகமும் ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயமும் இணைந்து இந்த இரத்ததான நிகழ்வை நடத்தின. இதன்போது, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இரத்தம் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதில் பெருமளவான குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிற்றுக்கிழமை 2023.04.02

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5078 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,905,310.00
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 3 1 1 4 3 5

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1426 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 312,012,910.00
ஆங்கில எழுத்து B — சுப்பர் இலக்கம் 12 — வெற்றி இலக்கங்கள் 07 14 60 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3320 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,064,281.44
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 09 24 28 41

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 387 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,751,416.00
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 12 40 41 54 — விசேட இலக்கினம் கும்பம்

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1533 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,678,280.40
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 2 9 6 6 7 0

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1108 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,395,490.40
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 04 05 24 66




# புனித வியாழன்

## பரிசுத்த வாரத்தின் அர்த்தமுள்ள முப்பெரும் தினங்கள்

பரிசுத்த வாரத்தின் முப்பெரும் நாட்களில் முதல் நாளாக புனித வியாழனைக் குறிப்பிட முடியும்.

நம் ஆண்டவராகிய இயேசு தமது பேரன்பை மையப்படுத்தி செயற்படும் பல்வேறு நிகழ்வுகள் அன்றைய நாளில் நினைவு கூரப்படுகின்றன.

தவக்காலத்தை நிறைவு செய்யும் வகையிலும் ஆண்டவருடைய உயிர்ப்பினைக் கொண்டாட நம்மை நாம் தயாரிக்கின்ற வாயிலும் மூன்று முக்கிய நாட்களாக புனித வியாழன், புனித வெள்ளி மற்றும் புனித சனி ஆகிய தினங்கள் அமைகின்றன.

புனித வியாழனில் நம் ஆண்டவர் இயேசு தமது சீடர்களின் பாதங்களைக் கழுவி அன்பின் மகத்துவத்தையும் அன்பிற்காக தியாகம் செய்ய வேண்டும் என்ற பாடத்தையும் எமக்கு கற்றுத் தருகின்றார்.

அத்துடன் ஆன்மீகத்தின் உச்சக்கட்ட வழிபாடு உணவைப் பகிர்தல். அந்த பகிர்தலாய் தன்னையே உடைத்து உண வாய் பரிந்தளிக்கும் மாண்புமிகு பணியை அவர் நிறைவேற்றுகின்றார்.

மூன்றாவதாக அத்தகைய மாண்புமிகு பணியை ஆற்றுவதற்காக குருத்துவத்தை ஏற்படுத்தினார். அவற்றை செய்த ஆண்டவர், பிறர் வாழ்வுக்காக தான் செய்ததை அப்படியே செய்யுங்கள் என்பதையும் இந்த வழிபாடுகளின் ஊடாக தெரிவிக்கின்றார்.





இவற்றை அடிப்படையாகக் கொண்டே புனித வியாழனன்று ஆலயங்களில் இறை வார்த்தை வழிபாடு, பாதம் கழுவும் சடங்கு, நற்கருணை வழிபாடு மற்றும் நற்கருணை பவனி என நான்கு பகுதிகளாக வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன.

பாதம் கழுவுதல் என்பது ஒரு விருந்தோம்பலுக்கான வழக்கமாக இருந்து வந்துள்ளது. யூத கலாசாரத்தில் ஒரு விருந்தினர் வீட்டுக்கு வருகின்ற போது அவரை வரவேற்பதற்கு அங்கு வேலை செய்யும் அடிமை அந்த விருந்தினருடைய பாதங்களை கழுவுவதும் விருந்து பசாரத்திற்கு அழைத்தவர் அந்த விருந்தினருக்கு அருந்துவதற்காக அன்புடன் தண்ணீரை வழங்குவதும் வழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

இதனை நாம் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கூட காண முடிகின்றது.

இன்றும் கூட பண்டைய சமூகங்கள் மத்தியில் இது வழக்கத்தில் உள்ளதை குறிப்பிட முடியும்.

புனித வியாழனன்று பாதம் கழுவும் சடங்குகள் இப்போதும் கூட இடம் பெற்றாலும் அதன் நோக்கம் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை.

அன்றைய சமய சமூக பின்னணியில் ஆண்டான், அடிமை என்ற நிலையே காணப்பட்டது இயேசுவின் சீடர்களும் சில வேளைகளில் அத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருந்தார்கள்.

கிறிஸ்தவர்களிடையே அத்தகைய மனப்பான்மை இருக்கக் கூடாது என்பதை இந்த பாதம் கழுவும் சடங்கு எமக்கு உணர்த்துகிறது.

சமத்துவ சமுதாயத்தை அமைக்க விரும்பிய இயேசு அவருக்குப் பின் மக்களை வழிநடத்த வேண்டிய அவருடைய சீடர்களிடமிருந்து அந்த வேறுபாடுகளை அகற்ற முயற்சிக்கின்றார்.

அதற்கு முன் மாதிரியாகவே ஏற்றத்தாழ்வுகளை களையும் விதத்தில் அவர் தன்னுடைய சீடர்களுடைய பாதங்களைக் கழுவுகின்றார்.

தான் செய்ததை சீடர்களும் செய்ய வேண்டும். அதற்கு அவர்கள் கடமைப்பட்டுள்ளார்கள் என்று இயேசு அன்புக் கட்டளையிட்டார்.

அந்த அன்புச் செயல்களை வாழ்நாள் முழுவதும் தொடர்வதற்காகவே குருத்துவத்தை அந்த நாளில் அவர் ஏற்படுத்தினார்.

அவர் சீடர்களின் பாதங்களைக் கழுவிய போது சீடர்களில் ஒருவரான பேதுரு "ஆண்டவரே நீரா என் காலடிகளை கழுவுவது?" என்ற கேள்வியை எழுப்பிய போது, " நான் உன் காலடிகளை கழுவாவிட்டால் என்னோடு உனக்கு பங்கில்லை" என இயேசு கூறுவது யோவான் நற்செய்தியில் காணப்படுகிறது.

கடந்த 2013 ஆம் ஆண்டு பாதம் கழுவும் சடங்கின் போது புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திய பரிசுத்த பாப்பரசர் அவர்கள், திருச்சபையின் 2000 ஆண்டு வரலாற்றில் முதல் முறையாக பாதங்களை வேற்று மதத்தினரின் பாதங்களையும் அதிலும் இரண்டு பெண்களுடைய பாதங்களையும் கழுவினார். சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களை கௌரவித்து, அவர்களது மாண்பினை பாதுகாத்த அவர், ஆயர்களும் குருக்களும் அதனையே பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இயேசு நமக்கு முன்மாதிரியாக காட்டியதை நாமும் எமது வாழ்க்கையில் முன்னெடுத்துச் செல்ல கடமைப்பட்டுள்ளோம். புனித வியாழனின் சடங்கு என்பதாக மட்டும் அது இருந்துவிடாமல் தொடர்ச்சியாக நாம் எமது அன்பை வெளிப்படுத்தும்



வகையில் ஒருவர் ஒருவருடைய பாதங்களை கழுவுவோம். அப்போதுதான் "நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு உங்களுக்கு நான் முன்மாதிரி காட்டினேன்" என்று இயேசுவின் அன்புக் கட்டளை அர்த்தமுள்ளதாகும்.

நம் குடும்பத்தினர், நம் உறவுகள் நம் நண்பர்கள் மட்டுமன்றி கணவன் மனைவி, மாமியார் மருமகள், பெற்றோர் பிள்ளைகள், சகோதரர் சகோதரிகள் என ஒவ்வொருவருடைய பாதங்களையும் நாம் கழுவும் போது நம் வாழ்வில் கசப்பான நினைவுகள் சிந்தனைகள் அகன்று நம் வாழ்வும் இந்த புனித வாரத்தில் புனிதம் அடையும்.

"ஒவ்வொரு பகிர்வும் புனித வியாழன் தான். ஒவ்வொரு மனிதனும் இன்னொரு இயேசு தான்" தன் அன்பினால் உலகை வெற்றி கொண்ட நம் ஆண்டவர் இயேசுவைப் போல அன்புக்காகவே வாழ்ந்து அன்பை பெற்றுக் கொடுப்பதன் மூலம் நம் வாழ்வையும் அர்த்தமாக்குவோம். அதற்கு இந்த புனித நாட்கள் உறுதுணையாகட்டும்.

இறை ஆசீர் எப்போதும் நம்முடன்.

**செல்வராஜ் சூசைமாணிக்கம்...**

# திருப்பாடுகளின் புனித வெள்ளியும்

## இயேசுவின் ஏழு வார்த்தைகளும்



திருப்பாடுகளின் புனித வெள்ளியில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து பேசிய ஏழு வார்த்தைகள் கிறிஸ்தவ வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றன. .

"பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கின்றார்கள்" என இயேசு கூறியதை லூக்கா நற்செய்தி 23 ஆம் அதிகாரம் குறிப்பிடுகிறது.

இருளின் சக்திகள் அந்த மனிதர்களின் மனக்கண்களை குருடாக்கி அவர்களது இருதயத்தை கடினப்படுத்தி அவ்வாறு ஒரு கொடூரச் செயலை செய்யத் தூண்டி விட்டுள்ளது.

அதனால் தான் அவர்கள் ஒரு தூய்மையான மனிதரை சிலுவையில் அறைந்தார்கள் என்று சிந்தித்த இயேசு, அவர்களை இன்னதென்று அறியாமல் செய்துவிட்டார்கள் என மன்னிக்கின்றார்.

"இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்"

இரண்டு திருடர்களுக்கிடையில் இயேசு சிலுவையில் தொங்கிய போது, அதில் ஒருவன் "ஆண்டவரே நீர் உன்னுடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்"என்று இயேசுவிடம் கூறி தன் வாழ்க்கையில் திருந்துவதற்காக அவனுக்கு கொடுக்கப்பட்ட கடைசி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டான். அப்போது அவனைப் பார்த்து இயேசு கூறிய வார்த்தையே இதுவாகும்.

இயேசு தம்முடைய தாயை நோக்கி "ஸ்திரீயே அதோ உன் மகன் என்றார். பின்பு அந்த சீடரை நோக்கி "அதோ உன் தாய்" என்றார்.

இயேசு தமது வேதனையின் போதும் கூட அவரது தாயின் எதிர்கால பராமரிப்பிற்கு தேவையானதை செய்தார். தன் தாயை தமது சீடரான யோவானிடத்தில் ஒப்படைத்தார். இது பெற்றோரை கணப்படுத்த வேண்டியதை நமக்கு உணர்த்துகிறது.

"என் தேவனே! என் தேவனே ஏன்
என்னைக் கைவிட்டீர்."

இறைவன் நமக்கு வழங்கிய வாக்குத்தத்தங்களில் "நான் உன்னை விட்டு ஒருபோதும் விலகுவதுமில்லை உன்னைக் கை விடுவதும் இல்லை" என்பது முக்கியமானது. நம்மை ஒருபோதும் கைவிடாமல் இருப்பதற்காகவே கடவுள் இயேசுவை சிலுவையில் கைவிட்டார் என்பதையே இந்த வார்த்தை உணர்த்துகிறது.

"தாகமாயிருக்கிறேன்"

இந்த தாகம் சாதாரணமான தாகம் அல்ல என்றும் அக்கினியின் மத்தியில் இருக்கின்ற ஒரு மனிதனுக்கு ஏற்படும் மரண தாகம் போன்றது என்றும் வேத வல்லுனர்கள் தெரிவிக்கின்றார்கள்.

அந்த தாகத்திற்காக அவர் புளித்த காடியை குடிக்க வாங்கிக் கொண்டது தொடர்ந்து எம் மீது வந்த சாபங்களை அகற்றுவதற்காகவே என்பதாகும்.

"எல்லாம் முடிந்தது"

இயேசு சிலுவையில் தொங்கிய போது "எல்லாம் முடிந்தது" என்று சொன்னது நமது பாவமன்னிப்புக்கான முழு கிரயத்தையும் அவர் செலுத்தி விட்டார் என்பதைக் காட்டுகின்றது. அந்த ஒரு வார்த்தையில் பல விடயங்கள் அடங்கியுள்ளன.

"பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கின்றேன்"

இயேசுவிடமிருந்து யாரும் அவரது ஜீவனை எடுக்க முடியாது. அவரே அதனைக் கொடுத்தார்.

இயேசுவின் சிலுவை மரணம் தற்காலிகமானது அல்ல. கடவுளால் காலங்காலமாய் திட்டமிடப்பட்டது என்பதை நாம் இந்த ஏழு வார்த்தைகள் ஊடாக தியானிப்பது முக்கியமானது.

**எல்.எஸ் ...**




# சவால்கள், துயரங்களை சந்திக்கத் தயாரானால்

# மரணத்தையும் வென்று மறுவாழ்வு பெற முடியும்

ஆவிக்குரிய வழியில், சவால்களையும், சங்கடங்களையும், துயரங்களையும் சந்திக்கத் தயாராக இருந்தால், நாம் மரணத்தை வென்று மறுவாழ்வு பெற முடியும்.

நாம் தவக் காலத்தின் ஐந்தாம் ஞாயிறை கடந்த வாரம் சிறப்பித்தோம். அதன் வாசகங்கள் கல்லறைக்குப் பிறகும் காவியம் சொல்லும் புதுவாழ்வு எனும் நிறைவாழ்வு இருக்கின்றது என்பதை நமக்கு நினைவுபடுத்தின. முதல் வாசகத்தில;

தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே: என் மக்களே! இதோ நான் உங்கள் கல்லறைகளைத் திறக்கப் போகிறேன். உங்களை உங்கள் கல்லறைகளினின்று மேலே கொண்டுவருவேன். உங்களுக்கு இஸ்ரயேல் நாட்டைத் திரும்பக் கொடுப்பேன். அப்போது, என் மக்களே! நான் உங்கள் கல்லறைகளைத் திறந்து உங்களை அவற்றிலிருந்து வெளிக்கொணர்கையில், நானே ஆண்டவர் என்பதை அறிந்து கொள்வீர்கள். என் ஆவியை உங்கள்மீது பொழிவேன். நீங்களும் உயிர் பெறுவீர்கள். நானும் உங்களை உங்கள் சொந்த நாட்டில் குடியமர்த்துவேன். “ஆண்டவராகிய நான் உரைத்தேன்; நானே இதைச் செய்தேன்” என அப்போது அறிந்து கொள்வீர்கள், என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.

நற்செய்தி வாசகத்தில் இயேசு இறந்த இலாசரை உயிர்ப்பிக்கும் நிகழ்வு கொடுக்கப்பட்டது. கல்லறைக்கு முன்பாகச் சென்ற இயேசு, ‘கல்லை அகற்றி விடுங்கள்’ என்று கூறியபோது மார்த்தா அவரிடம், “ஆண்டவரே, நான்கு நாள் ஆயிற்று; நாற்றம் அடிக்குமே!” என்றார்.

இயேசு அவரிடம், “நீ நம்பினால் கடவுளின் மாட்சிமையைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா?” என்று கூறியவுடன் கல்லறைத் திறக்கப்படுகிறது, இலாசரை உயிர்பெற்றெழச் செய்கிறார் இயேசு

நாம் ஊனியல்புக்குக் கடமைப்பட்டிருக்கவில்லை; அவ்வியல்பின்படி வாழவேண்டியதில்லை. நீங்கள் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்ந்தால், சாகத்தான் போகிறீர்கள்; ஆனால், தூய ஆவியின் துணையால், உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால், நீங்கள் வாழ்வீர்கள்” (காண்க உரோ 8:1213) என்கிறார். இங்கே ஊனியல்பு (உடல் சார்ந்த) என்பது தீய ஆவிக்குரிய செயல்களைக் குறிக்கின்றது. இதன் அடிப்படையிலே தீய ஆவிக்குரிய இயல்புகளாக 16 காரியங்களை கலாதியாருக்கு எழுதிய திருமுகத்தில் எடுத்துக்காட்டுகின்றார் பவுலடியார்.

மேலும் இலாசரை உயிர்ப்பிக்கும் இயேசு, "கட்டுகளை அவிழ்த்து அவனைப் போகவிடுங்கள்" என்கிறார். இந்தக் கட்டுகள் என்பது ஊனியல்புக்குரிய கட்டுகள் என்பதையும் நாம் உணர்ந்துகொள்வோம். ஆக, அலகை காட்டும் மரணம் என்னும் மாய வலையில் வீழ்ந்துவிடாமலிருக்க தூய ஆவியின் தூய வாழ்வுக்கான கனிகளை அணிந்து கொள்வது மிகவும் அவசியமாகிறது.

அது ஒரு அழகான நாடு. அந்நாட்டிற்கென்று ஒரு சட்டமிருந்தது. அதன்படி யார் வேண்டுமானாலும் அந்த நாட்டிற்கு மன்னராக வரமுடியும். ஆனால், அந்தப் பதவி ஐந்தாண்டுகள் மட்டுமே! ஐந்தாண்டு முடிந்த மறு நாளே மன்னரை அந்நாட்டின் எல்லையோரம் பாய்ந்தோடும் ஆற்றின் மறுபுறமுள்ள அடர்ந்த காட்டில் விட்டுவிடுவார்கள்.

அந்தக் காட்டில் மனிதர்கள் கிடையாது. கொடிய விலங்குகள் மட்டுமே வாழ்ந்தன! மன்னர் காட்டிற்குள் நுழைந்ததுமே அவ்விலங்குகள் அவரைக் கொன்று தின்றுவிடும். இந்தச் சட்டத்தை யாராலும் மாற்ற இயலாது. இந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டவர் மட்டுமே ஆட்சி அரியணையில் அமர முடியும். ஆக, மன்னராக முடிசூட்டிக் கொண்டவரின் தலையெழுத்து ஐந்தாண்டுகளுக்குப் பின் கட்டாய மரணம் என்பதுதான்.

இந்தக் கடுமையான சட்டத்துக்குப் பயந்தே யாரும் அந்தப் பதவிக்கு ஆசைப் படாமலிருந்ததால் அந்த அரியணை பெரும்பாலும் காலியாகவே இருந்தது. இருப்பினும் ஒரு சிலர் 'எப்படியிருந்தாலும் சாகத்தானே போகிறோம்; மன்னராகவே மடியலாமே!' என்று பதவி ஏற்பதுண்டு. அதிலும் பாதி மன்னர்கள் அந்தப் பயங்கர காட்டிற்குப் போகும் வழியிலேயே மாரடைப்பால் மரணமடைவதுமுண்டு.

இப்படி ஒரு மன்னருக்கான ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம் முடிவடைந்தது.

அன்று ஆற்றின் கரையைக் கடந்து காட்டிற்குச் செல்ல வேண்டும். அவரை வழியனுப்ப நாடே திரண்டிருந்தது. மன்னரும் வந்தார், அவர் அவருடைய சிறப்பான ஆடைகளையும் நகைகளையும் அணிந்து, முடிசூடி, தங்க வாளேந்தி வைரங்கள் மின்ன மக்கள் முன் நின்றார்.



அம் மன்னர். மக்கள் வாயைப் பிளந்தனர் "இன்னும் அரை மணிநேரத்தில் சாகப் போகிறவருக்கு இவ்வளவு அலங்காரமா!" என்று கேலியும் கிண்டலும் செய்தனர். தான் செல்லவிருந்த படகைப் பார்த்துவிட்டு சினம் கொண்ட அவர், "மன்னர் செல்லும் படகா இது! பெரிய படகைக் கொண்டு வாருங்கள்! நான் நின்றுகொண்டா செல்வது! சிம்மாசனத்தைக் கொண்டு வாருங்கள்!" என்றார்.

கட்டளைகள் பறந்தன; காரியங்கள் நடந்தன! சற்று நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட அழகான படகு ஆற்று நீரைத் கிழித்துக்கொண்டு மறுகரை நோக்கிப் பயணித்தது. மக்கள் திகைத்து நிற்க, மன்னன் கையசைக்க பயணம் தொடர்ந்தது.

இதில் மிகவும் அதிர்ச்சியடைந்தவர் படகோட்டியே! காரணம், இதுவரை அவர் மறுகரைக்கு அழைத்துச் சென்ற எந்த மன்னரும் அங்கே மகிழ்ச்சியாக சென்றதில்லை. அழுது புலம்பிக்கொண்டுதான் செல்வார்கள். எனவே, இவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியாத படகோட்டி,

"மன்னா! நீங்கள் எங்கே செல்கிறீர்கள் தெரியுமா?" என்று கேட்டார். "தெரியும் மறுகரைக்குச் செல்கிறேன்!" என்றார் மன்னர். "அங்கே சென்றவர்கள் திரும்பவும் இந்த நாட்டிற்கு வந்ததில்லை தெரியுமா?" என்றார் படகோட்டி. "தெரியும். நானும் திரும்ப இந்த நாட்டிற்கு வரப் போவதில்லை!" என்றார் மன்னர். "அப்படியானால் எப்படி உங்களால் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?" என்று கேட்டார் படகோட்டி.

"அதுவா! நான் என்ன செய்தேன் தெரியுமா? ஆட்சிக்கு வந்த ஓராண்டு முடிவில் ஆயிரம் வேட்டைக்காரர்களை அந்தக் காட்டிற்கு அனுப்பினேன்; அவர்கள் கொடிய விலங்குகளை எல்லாம் வேட்டையாடிக் கொன்று விட்டார்கள்! இரண்டாமாண்டு முடிவில் ஆயிரம் விவசாயிகள் சென்றார்கள்; காட்டை செப்பனிட்டு உழுதார்கள்; இன்று ஏராளமான தானியங்கள் காய்கறிகள் அங்கு விளைகின்றன. மூன்றாமாண்டு முடிவில் ஆயிரம் கட்டடக்கலை வல்லுநர்கள், தொழிலாளர்கள் சென்றனர். இன்று வீடு, வாசல், அரண்மனை, சாலைகள் எல்லாம் தயார்! நான்காம் ஆண்டு முடிவில் ஆயிரம் அரச அதிகாரிகள் சென்றனர். நிர்வாகம் சீரடைந்தது.

இந்த 4000 பேரும் தங்கள் மனைவி, குழந்தைகளுடன் சென்று அங்கே வாழ்வதால் அவர்கள் ஒரு சிறிய நாட்டையே உருவாக்கிவிட்டார்கள். இப்போது நான் காட்டிற்குப் போகவில்லை; என்னுடைய புதிய நாட்டிற்குப் போகின்றேன்! சாகப் போகவில்லை, வாழப் போகின்றேன்! அதுவும் மன்னராக ஆளப்போகிறேன்! உனக்கு ஒருவேளை அரண்மனைப் படகோட்டி வேலை வேண்டுமென்றால் இந்தப் படகோடு இப்படியே என் நாட்டில் வேலைக்குச் சேர்ந்து விடு!" என்றார் மன்னர்.

சொன்னதைக் கேட்டு அப்படியே வியப்பில் ஆழ்ந்துபோனார் அந்தப் படகோட்டி. ஆம், மரணத்தை வென்று மறுவாழ்வு பெற விரும்புபவர்களுக்கு எல்லாமே சாத்தியம் என்பதை இந்நிகழ்வு உணர்த்துகிறது.

சாவை வெல்வதற்குத் தூய ஆவிக்குரிய இயல்புகள் நமக்கு அவசியம் தேவைப்படுகின்றன.

ஆகவே, தூய ஆவிக்குரிய வழியில் சவால்களையும் சங்கடங்களையும் துயரங்களையும் சந்திக்கத் தயாராக இருந்தால் நாம் மரணத்தை வென்று மறுவாழ்வு பெற முடியும் என்பதை உணர்வோம். அதற்கான அருள் வரங்களுக்காக ஆண்டவர் இயேசுவிடம் இறையருள்வேண்டி மன்றாடுவோம்.

**செல்வராஜ் சூசைமாணிக்கம்...**

# கிழக்கின் குரல்



## சித்திரை புத்தாண்டு கலாசார விழா; மட்டக்களப்பில் கலந்துரையாடல்





**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய கலாசார விளையாட்டு விழாவை நடத்துவதற்கான விசேட கலந்துரையாடலொன்று மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை (01) நடைபெற்றது.

இந்த விழாவை நடத்துவதற்காக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந்தின் மேற்பார்வையின் கீழ் இராணுவத்தினர், பொலிஸார், மாநகர சபையினர், லயன்ஸ் கழகத்தினர், சமூக அமைப்பினர், கலாசாரப் பிரிவினர், ஊடகப் பிரிவினர், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் பாரம்பரிய கலாசார விளையாட்டு விழாவை நடத்துவதற்கு இந்தக் கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது மரதன் ஓட்டம், மெல்ல சைக்கிளோட்டம், போத்தலில் நீர் நிரப்புதல், கோலம் போடுதல், தையல் ஊசிக்கு நூல் போடுதல், சாக்கோட்டம், யானைக்கு கண் வைத்தல், கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல், கயிறு இழைத்தல், தலையணைச் சமர், கிராமியப் பாடல், சங்கீதக் கதிரை, பலூன் ஊதி உடைத்தல், கிட்டி அடித்தல், றபான் அடித்தல், பல்லாங்குழி, வட்டக்காவடி உள்ளிட்ட விளையாட்டுகளை நடத்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

## நாவற்குடா பகுதியில் இரத்ததான முகாம்



**வெல்லாவெளி நிருபர்**

தந்தை செல்வாவின் 125ஆவது ஜனன தினத்தையொட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்று, மட்டக்களப்பு மாவட்டத்தின் நாவற்குடாப் பிரதேசத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் இணைந்து இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் தீபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, தந்தை செல்வாவின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அகவணக்கமும் செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரத்ததான முகாம் ஆரம்பமாகியதுடன், இதில் பெருமளவானோர் கலந்துகொண்டு இரத்ததானம் அளித்தனர்.

## கல்முனை பஸார் கடை தீக்கிரை

**கல்முனை குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைக் கடற்கரைப் பள்ளி வீதியை அண்டி அமைந்துள்ள ஆட்டோ பஸார் சந்தியிலுள்ள கடையொன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (02) தீக்கிரையாகியுள்ளது.

வாழைப்பழம் மற்றும் இடியப்பம் விற்பனை செய்யும் கடையிலேயே இத்தீ விபத்து ஏற்பட்டது.

வாழைப்பழக் குலைகளுக்கு புகை அடிக்கும் போதே, தீ பரவியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இத்தீ விபத்தினால் கடையிலிருந்த உடைமைகள் சேதமாகியுள்ளன.

கல்முனை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர், சம்பவ இடத்துக்குச் சென்று தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## அக்கரைப்பற்றில் குழியில் விழுந்து சிறுவன் மரணம்

**வாச்சிக்குடா விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, நாவற்காடு பிரதேசத்தில் மலசலக்கூடக் குழியில் இரண்டரை வயதுடைய சிறுவனொருவன் கடந்த சனிக்கிழமை (01) தவறி விழுந்து உயிரிழந்துள்ளான்.

பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்ட மலசலக்கூடக் குழியிலேயே இச்சிறுவன் விழுந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சிறுவனைக் காணாதவிடத்து, இச்சிறுவனின் தாயும் உறவினர்களும் தேடியுள்ளனர்.

இதன்போது, இந்த மலசலக்கூடக் குழியில் இறங்கித் தேடிய போது, இச்சிறுவன் அதில் விழுந்து கிடந்துள்ளான். மலசலக்கூடக் குழியிலிருந்து சிறுவனை மீட்டு, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும், அச்சிறுவன் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறையில் யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்த முஷாரப் எம்.பி. நடவடிக்கை

**எஸ்.எம்.அறூஸ்**

அம்பாறை மாவட்டத்தில் யானை மனித மோதலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை பாராளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் முன்னெடுத்து வருகின்றார். இந்நிலையில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவையும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தையும் முஷாரப் எம்.பி. அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு போதியளவான ஆளணிகளை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்து, மக்கள் வாழ்கின்ற குடியிருப்புக் கிராமங்களின் எல்லைகளில் யானை வேலிகள் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்வதாகவும் தெரிவித்தார்.



இதேவேளை, இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், அம்பாறை மாவட்டத்தில் யானை – மனித மோதலைத் தடுப்பதற்காக முஷாரப் எம்.பி.யின் தலைமையில் வனஜீவராசிகள் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதுடன், இக்குழுவினர் கள விஜயம் செய்து அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்குநடவடிக்கைஎடுப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த காலத்தை விட தற்போது யானை வெடிகள் குறைந்தளவே பிரதேச செயலகங்களுக்கு கிடைப்பதாகவும் ஆகையினால், கூடுதலான யானை வெடிகளை வழங்குமாறும்முஷராப் எம்.பி. கேட்டுக்கொண்டார். இதற்கு உடனடியாக ஆவண செய்வதாக, வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். பொத்துவில் ஹிஜ்ரா நகர் பிரதேசத்தின் சிரியா, ஜெய்க்கா, றொட்டை ஆகிய கிராமங்களில் யானை வேலிகளை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருவதாகவும், அவர் தெரிவித்தார்.

## கிழக்கில் அதிகளவில் வெள்ளரிப்பழம் விற்பனை

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**



கிழக்கு மாகாணத்தில் தற்போது வெள்ளரி மற்றும் தார்பூசணி பழங்களுக்கு அதிகளவில் கேள்வி காணப்படுவதுடன், அவற்றின் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்நிலையில், இம்மாகாணத்தில் வெள்ளரிப்பழமொன்று 250 ரூபா முதல் 500 ரூபா வரையும் ஒரு கிலோகிராம் தார்பூசணி பழம் 200 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக, நுகர்வோர் தெரிவித்தனர்.

தற்போது நிலவுகின்ற உஷ்ணமான காலநிலை காரணமாக இந்தப் பழங்களை நுகர்வோர் அதிகளவில் கொள்வனவு செய்து வருவதாக, விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பழங்களின் செய்கையாளர்கள் தற்போது அதிகளவு வருமானத்தை ஈட்டு கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம் பிரதேசத்திலிருந்து வெள்ளரிப் பழங்களும் மொனராகலை மாவட்டத்திலிருந்து தார்பூசணிப் பழங்களும் பெருமளவில் அம்பாறை மாவட்டத்துக்கு கொண்டு வந்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



அல்ஆலிம் பட்டம் பெற்று வெளியேறிய இறக்காமத்தைச் சேர்ந்த ஐந்து உலமாக்களை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு, இறக்காமம் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகையின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை (31) நடைபெற்றது. இந்த உலமாக்களுடன் இறக்காமம் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் மௌலவி ஏ.கே.அப்துல் றஊப், இறக்காமம் பிரதேச புதிய குவாஸி நீதிபதி பாறூக் சாஹிப் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: இறக்காமம் தினகரன் நிருபர்)

## மஞ்சந்தொடுவாயில் பேரீச்சம்பழம் வழங்கல்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மஞ்சந்தொடுவாய் அல் பஜ்ர் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு நோன்பு திறப்பதற்காக பேரீச்சம் பழங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (02) வழங்கி வைக்கப்பட்டன.

அல் பஜர் நலன்புரி அமைப்பின் பள்ளிவாசல் மண்டபத்தில் வைத்து குடும்பமொன்றுக்கு ஒரு கிலோகிராம் படி 650 குடும்பங்களுக்கு பேரீச்சம் பழங்கள் வழங்கி வைக்கப்பட்டன. மேற்படி அமைப்பின் தலைவர் எஸ்.எ.கே.பழீலுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் கலந்து கொண்டு மக்களுக்கு பேரீச்சம் பழங்களை வழங்கி வைத்தார்.

## திருமலையில் 72 சிறு குளங்களின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

**கிண்ணியா மத்திய நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தில் 72 சிறு குளங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அதற்கான வேலைத்திட்டம், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரள ஆகியோர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முதற்கட்டமாக கோமரன்கடவெல பிரதேசத்திலுள்ள திபுல்வெவ மற்றும் பலுகஸ்வெவ குளங்களை அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினரும் கொண்ட குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை (31) சென்று பார்வையிட்டனர்.

விவசாய அமைச்சினுடைய 'CSIAP' எனும் திட்டத்தின் கீழ் சிறு குளங்களுக்கான புனரமைப்புப் பணி முன்னெடுக்கப்படுகின்றது.

காலநிலை மாற்றத்தின் பாதிப்பினால் விவசாயச் செய்கைக்கு போதியளவான தண்ணீர் வசதியின்றித் தவிக்கும் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அவர்களின் விவசாயச் செய்கைகக்குத் தேவையான தண்ணீரை வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இது இவ்வாறிருக்க, திருகோணமலை மாவட்டத்தில் நீர்ப்பாசன செழுமை திட்டத்தின் கீழ் இதுவரையில் 101 குளக்கரைகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

## சமூகநலன் கொடுப்பனவு; காத்தான்குடியில் மீளாய்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடிப் பிரதேச செயலாளர் யு.உதயசிறீதரின் வழிகாட்டலின் கீழ் காத்தான்குடிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சில்மியா தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.



இதன்போது, இந்த வேலைத் திட்டத்துக்காக இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட கணக்கெடுப்பு நடவடிக்கையின் முன்னேற்றம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

பிரிவில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக நலன் கொடுப்பனவு ஆய்வு மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆய்வு வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், அப்பிரதேச செயலத்தில் நேற்று திங்கட்கிழமை (03) நடைபெற்றது.

காத்தான்குடிப் பிரதேச செயலா

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.ஜரூப், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பத்மா ஜெயராஜ் உள்ளிட்டோர் தமது கருத்துகளை வழங்கினர்.

## கந்தளாயில் இப்தார் நிகழ்வு



**கந்தளாய் தினகரன், தம்பலகாமம், தோப்பூர் குறூப் நிருபர்கள்**

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியமும் கந்தளாய் கலை இலக்கியப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த புனித ரமழான் மாத நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு, கந்தளாய் அல்ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பீ.எச்.என்.ஜெயவிக்ரம கலந்து சிறப்பித்ததுடன், மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## அம்பாறை கலைஞர்களின் விபரங்கள் திரட்டல்

**காரைதீவு குறூப் நிருபர்**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த இந்துக் கலைஞர்களின் விபரங்களை திரட்டும் பணி தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இதற்கான முதலாவது கூட்டம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் தலைமையில் காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலைஞர்களின் விபரங்கள், கலைஞர்களின் ஆக்கங்கள், கலைஞர்கள் பெற்ற விருதுகள், சமூகத்தில் கலைஞர்களின் பங்களிப்பு, கலைஞர்களுக்கு எதிர்காலத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி, சம்மாந்துறை இந்து கலாசார உத்தியோகத்தர் கௌசல்யவாணி, காரைதீவு இந்து கலாசார உத்தியோகத்தர் சி.சிவலோஜினி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பொருளாதார நெருக்கடியில் இயல்பு வாழ்க்கைக்கான வழிமுறைகள்...

**நீங்கள் மக்கள் பொருளாதார மன்றம் அமைப்பை ஸ்தாபித்து நடவடிக்கை மேற்கொண்டு வருவது நாம் அறிவோம். அது தொடர்பாக கூற முடியுமா?**

ரெஜி பொருள் என்பது மக்கள் பொருளாதார மன்றத்தின் ஒருங்கமைப்பாளராக நான் கடமையாற்றி வருகின்றேன். இது கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இயங்கி வருகின்ற அமைப்பாகும். ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள மக்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடல்களைச் செய்கின்றோம். இயல்பு வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இந்த செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். நாம் எல்லோரும் நவீன கலாரசாரத்திற்குள் சிக்குப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆதலால் அதிகளவிலான மக்கள் அந்த நுகர்வுக் கலாசாரத்தை நோக்கி எல்லோரும் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் காசு கொடுத்துதான் ஒரு பொருளை வாங்க வேண்டும். எதாவது ஒன்றைச் செய்வதாக இருந்தாலும் பணத்தை மையமாகக் கொண்டே செயற்படுவதால் நாங்கள் பொருளாதார ரீதியில் பின் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.







**பின்நோக்கிச் செல்வதற்கான காரணங்கள் என்ன?**

ஆடம்பரமாக வாழ்வதென்பது வாழ்வல்ல. இருப்பதைக் கொண்டு மனத் திருப்தியோடு வாழ்வதுதான் நல்ல வாழ்க்கையாகும். இதுதான் சிறந்த வாழ்க்கை என்று மக்களுக்கு நாம் தெளிவுபடுத்தி வருகிறோம். நாம் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்பதற்காக ஒரு மூன்று மாடிக் கட்டடத்தைக் கட்டுவதற்காக வங்கியில் கடன்களை எடுப்பார்கள். பின்பு வீட்டைக் கட்டி விட்டு சாகும் வரை கடனாளியாக இருந்து இறந்து விடுவார்கள். மூன்று மாடியைக் கட்டிக் கடனாளியாக இருப்பதை விட இயல்பாக ஒரு வசதியுடையவனாக இருக்கலாம். எல்லோரும் போல் வாழ்வதற்கான ஒரு சாதாரண வீடு இருந்தால் போதும். அதற்கு டைல்ஸ் பதிக்கத் தேவையில்லை. அதைப் பதித்துத் தான் வாழ வேண்டும் என்று இல்லை. இருப்பதைக் கொண்டு திருப்தியான முறையில் வாழ்வதையே இயல்பான வாழ்க்கை முறையாகும். இது வந்து சிக்கனமோ கஞ்சனத்தனமோ என்று இல்லை. ஆனால் இயல்பு வாழ்க்கையை வாழ்தல் வேண்டும்.

நாங்கள் பல வருடங்கள் கடந்து வந்து விட்டோம். இயல்பான வாழ்க்கை முறைக்குள் இருப்பது தான் எங்களுடைய வசதியான சுவாத்தியமான வாழ்க்கையாக அமையும் என்ற விடயத்தை நாங்கள் பொது மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றோம். அவர்களுக்கு கடந்த காலங்களில் விட்ட தவறுகளை சுட்டிக் காட்டி ஆலோசனைகளை முன் வைக்கின்றோம்.

பொது மக்களுக்கு மத்தியில் நேரடியாகச் சென்று எப்படி இயல்பு வாழ்க்கை வாழலாம் என்று அவர்களுக்கு தெளிவூட்டல்களைச் செய்து வருகிறோம். பல வருடங்களை கடந்து வந்து விட்டோம். இயல்பு, கலாசார வாழ்க்கையோடு வாழும் போது கஷ்டம் என்ற விடயத்திலோ அல்லது வேறு ஒருவருடன் தங்கி நிற்க வேண்டும் என்ற விடயத்திலோ தேவை என்பது அவசியமில்லை. சுய கௌவரத்தோடு வாழ்தல் என்பதுதான் சிறப்பான வாழ்க்கையாகும்.

**நீங்கள் இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கான எத்தகைய வழிகாட்டல்களை செய்து வருகின்றீர்கள்?**

பொருளாதார ரீதியிலான பொறிமுறையிலான விடயங்களை நாங்கள் இதில் விசேடமாக கவனத்தில் கொள்ள வேண்டி இருக்கிறது. காட்டுக்குள் வீடுகளை கட்டி இருப்பார்கள். ஆனால் அவர்கள் எரி வாயுவினைப் பாவிப்பவர்களாய் இருப்பார்கள். இது எந்தளவு இயல்பு வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றால் சமுர்த்தி பெறும் ஒரு குடும்பம் ரூபா 2500 பெற்றுக் கொள்ளுவார்களாயின் எரிவாயு வாங்குவதற்கு 5150 பணம் செலவு செய்கிறார்கள். சாதாரணமாக ரூபா 5000 என எடுத்துக் கொண்டால் வருடம் அல்லது 12 மாதத்திற்கு ரூபா 60000 பணத்தை செலவு செய்கிறார்கள். இப்பணத்தை நெருப்புகுள் போடுகிறார்கள். இது எந்தளவு வீண். இது அவர்களுக்கு விளங்குவது இல்லை. 2500 ரூபா அரசாங்கம் தருகிறது. இன்னும் மேலதிகமாக 2500 ரூபாவை நெருப்புக்குள் போடுகிறார்கள் என்பதை விளங்குகிறார்கள் இல்லை. இப்படி கூட்டிப் பெருக்கி செலவு செய்கின்றீர்கள் எனச் சொல்லும் போதுதான் பொது மக்களுக்கு பெரியதொரு அதிர்ச்சியாக இருக்கிறது. காலடியில் விறகு இருந்தும் விறகைப் பயன்படுத்தாமல் எரிவாயுக்கு பணத்தைக் கொடுத்து நாசம் பண்ணுகிறோம். இதுதான் உண்மை.











சாதாரணமாக சட்டி, பானை கழுவுவதற்கு விம் சோப், கொயில் போன்றவை இல்லை என்றால் கழுவ முடியாது என்று கூறுகிறார்கள். குறிப்பிட்ட கால கட்டத்தில் தான் இவைகளுக்கு நாங்கள் மாறியிருக்கின்றோம். சாம்பலும் மணலையும் போட்டுத் தேய்த்தால் போய் விடும். அவைகள் எல்லாம் இரசாயனப் பதார்த்தங்கள் கலந்தவையே. ஒரு தடவை தண்ணீரால் கழுவினால் போகாது. சாப்பிடும் இடத்தில் சோப், விம் கட்டி, லிக்குட் போன்றவைகள் இருக்கும். அதனுடைய நுரைகள் படிந்து இருக்கும். அவைகள் இலகுவில் போகாது. நாங்கள் சாப்பிடும் போது அவை எல்லாம் எமது வயிற்றுக்குள் தான் செல்கிறது. ஒன்று செலவு. இரண்டாவது எமது உடல் ஆரோக்கியமும் இல்லாமற் போகிறது. ஒரு கிழமைக்கு சாதாரணமாக ஒரு வீட்டிற்கு 400 ரூபாய் செலவு செய்கிறார்கள். சும்மா தண்ணீரில் கழுவி ஊத்தி விடுவதற்கு 400 ரூபாய் செலவு செய்கிறார்கள். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் இந்த 400 ரூபா காசு தன் பிள்ளைகளுடைய படிப்புச் செலவை சமாளிப்பதற்கு அல்லது மிக அவசியமான ஒரு தேவையை நிறைவேற்றுவதற்கு உதவும். இப்படியான விடயங்களை பொது மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகிறோம்.

இது தொடர்பில் தெளிவுபடுத்துகின்ற போது பொது மக்கள் புதிய பொருளாதார திட்டத்திற்கு மாறியமையினால் இவ்வளவு காலமும் வீணாகச் செலவு செய்து விட்டோம் என்று எம்மிடம் வந்து முறையிடுகின்றார்கள். கவலைப்படுகின்றார்கள்.

நாங்கள் வீடு கட்டும் போது டையில்ஸ் பதிக்க வேண்டும் என்ற மன நிலை வந்து விட்டது. வசதியாக வாழ்வதற்கும் ஆரோக்கியத்திற்கும் டையில்ஸுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது.

ஒரு கூரைக்கு செலவு செய்யும் பணத்தை அப்படியே கொண்டு வந்து டையில்ஸ்களுக்குச் செலவு செய்கிறோம். வீடு கட்டியவர் பின்பு கடனாளியாகிறார். இயல்பு வாழ்க்கை என்பது டைல்ஸ் பதிப்பதில்லை. அது அவசியம் இல்லை என்று சொல்ல வரவில்லை. அவருடைய வாழ்க்கைச் சூழலுக்கு இது இருந்தால் தான் நான் வசதியாக இருக்கிறேன் என்ற அபிப்பிராயம் இல்லை. அதைக் கடந்து நல்லா வாழ வேண்டும் என்ற விடயத்தை நாங்கள் சுட்டிக் காட்டி வருகின்றோம்.

**நீங்கள் எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றீர்கள்?**

கடந்த 25 ஆம் திகதி நாங்கள் இயல்பு நிலையில் வாழும் குடும்பங்களை ஒன்று கூட்டி ஒரு கூட்டம் நடத்தினோம். இதில் வீட்டுத் தோட்ட வருமானத்தை வைத்து தன் பிள்ளைகளை பல்கலைக்கழகம் வரை படிப்பிக்கின்ற குடும்பங்கள் இருக்கின்றனர். அவர்கள் யாருடத்திலும் எதையும் எதிர்பார்க்காமல் இயல்பு வாழ்க்கையோடு வாழ்ந்து வரும் குடும்பங்கள். தங்களுடைய கையை நம்பி தங்களுடைய வாழ்க்கையை கொண்டு செல்லுபவர்கள் இருக்கிறார்கள்.

இப்படியான குடும்பங்களையும் சேர்த்து எங்களுடைய ஆலோசனைகளையும் கருத்திற் கொண்டு ஒரு குழுவாகச் சேர்ந்து இயல்பு வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளுகின்ற விடயத்தை வலுவூட்டும் வகையில் கௌரவிப்பு ஒன்றை செய்தோம்.

இது ஒரு சாதாரண விடயமாக இருந்தாலும் எமது நாட்டின் பொருளாதார விடயத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தொன்று. ஒவ்வொரு குடும்பங்களும் சேர்ந்ததுதான் ஒரு நாடு. ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று மாற்றங்களை ஏற்படுத்தும் போது இது நாடு தழுவிய ஒரு மாற்றமாக வரும். ஒரு கிராமத்தில் விறகு பாவிக்கக் கூடியவர்கள் 150 பேர் எரிவாயு பாவிப்பவர்களாக இருந்தால் இதனை நாங்கள் வெளிநாடுகளில் இருந்து தானே இறக்குமதி செய்ய வேண்டும். மின்சாரத்தை எப்படி மிச்சம் பிடிக்கலாம் என்ற ஆலோசனைகளையும் முன்வைத்து வருகின்றோம். வீட்டில் தேங்காய்ப் பால் ஒரு கோப்பை மிஞ்சி விட்டால் அதைக் கொண்டு போய் குளிர்ப் பெட்டியில் வைத்து விடுவோம். குளிர் பெட்டி மின்சாரத்தில் இயங்கும். அப்பொருளை குளிர் சாதனப் பெட்டியில் இருந்து வெளியே எடுக்கும் போது மின்சாரம் மின் அலகு ஒரு நாள் முழுக்க ஓடியிருக்கும். அதற்கு ஆறு தேங்காய் வாங்கி விடலாம். இன்றுள்ள நிலைமை இதுதான். அதற்கான வழிகாட்டல் நமக்கு இல்லை.

தண்ணீர் வீண் விரயம் செய்வதாலே அடிக்கடி மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டி இருக்கிறது. இரவில் மின்சாரம் பாவனை செய்வதால் மின் அலகுக் கட்டணம் குறைவாக அறவிடப்படுவதாக அறிகின்றோம். இப்படியான கருத்துக்களை மக்கள் மயப்படுத்துவதற்காகத்தான் மக்கள் பொருளாதார மன்றம் என்ற அமைப்பை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம்.

**இதன் மூலம் மக்கள் பயன் அடைந்துள்ளார்களா?**

நாங்கள் இறுதியாக பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினோம். அதற்கு பெரு எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர். எங்களுடைய தெளிவூட்டலைக் கேட்டு சில விடயங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்று அக் கூட்டத்தின் போது மக்கள் கருத்தினைத் தெரிவித்தார்கள். தோட்டத்தில் தண்ணீர் இறைப்பதாக இருந்தால் இரவு வேளைகளிலே இறைத்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இரவு 10.00 மணிக்குப் பிறகுதான் தோட்டத்திற்கு தண்ணீர் இறைக்கின்றார்கள். இரவில் பாவனைகளை மேற்கொள்வதால் மின்சாரக் கட்டணத்தை குறைக்கக் கூடியதாக இருக்கிறது. உடைகளை அயன் பண்ணும் போது முதல் மகள் அயன் பண்ணுவார். அடுத்து மகன் வந்து அயன் பண்ணுவார். இப்படி ஒவ்வொருவராக வந்து அயன் பண்ணுவார்கள். இரவு 10.00 மணிக்கு அயன் பண்ண வேண்டும். அப்பொழுது வீட்டில் பிள்ளைகள் படிப்பதாக இருந்தால் இன்னும் கொஞ்சம் நேரம் விழித்து இருந்து படிப்பார்கள். அதிலும் நன்மை இருக்கிறது. நாங்கள் கொடுத்த அறிவுறுத்தலின்படி மின்சார பாவனை விடயத்தில் இரவுக்கு மாறியிருக்கிறோம். வீட்டுத் தோட்டங்களை ஆரம்பித்துள்ளார்கள். ஆடம்பர செலவு எது? அத்தியாவசியமான செலவு எது? ஆடம்பமற்ற செலவு எது ? என்பதை அவர்களே சுயமாகக் கண்டு பிடித்துச் செயற்படுகின்றார்கள்.

**கஜேந்திரன் ரெஜினோல்ட்**
**மக்கள் பொருளாதார மன்றத்தின் ஒருங்கமைப்பாளர்**

வீட்டில் மோட்டார் சைக்கிள் ஒன்று இருக்கும். எங்கேயாவது சரி பணம் வந்து விட்டால் இன்னுமொரு மோட்டார் சைக்கிளை வாங்குவார். இவை எல்லாம் நமக்கு அவசியமில்லாத செலவுகள் என்று மக்கள் கண்டு பிடிக்கின்றார்கள். இது நமக்கும் தேவையில்லை என்று தெளிவான முடிவுகளை எடுக்கின்றார்கள். இவ்வளவு காலமும் செய்து கொண்டு வந்த செலவை அவசியமற்றது என்று அவர்கள் கண்டு பிடிக்கக் கூடிய ஆற்றல் இருக்கிறது. இது அவசியமானது இது அவசியமற்றது. இது இப்ப தேவையில்லை. கொஞ்ச நாளைக்குத் தள்ளிப் போடலாம். இவ்வாறான நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் கண்டு பிடிக்கக் கூடியதாக இருக்கின்றது. மக்கள் மத்தியில் ஒரு முன்னேற்றத்தைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அக்கரையாயன், கோளாவில், கந்தபுரம், ரத்தினபுரம் ஆகிய இடங்களில் இந்த வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். இதனை கிளிநொச்சி மாவட்ட முழுவதும் மேற் கொள்வதுதான் எங்களுடைய நோக்கம்.

நாங்கள் கௌரவிப்புத் திட்டத்தை நடத்தக் காரணம். எங்களோடு தொடர்பு பட்டவர்களை அழைத்து மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வூட்டலைச் செய்து இயல்பு வாழ்க்கை முறைக்கு ஒவ்வொரு குடும்பங்களையும் கொண்டு வருவதற்காகவே இந்த கௌரவங்களையும் பாராட்டுக்களையும் வழங்கி ஒரு முன்னேற்றத்தையும் பயனையும் கண்டு இருக்கின்றோம் என்று கூறலாம்.

**உங்கள் முயற்சிகளுக்கு காவேரிக் கலாமன்றத்தின் பங்களிப்பு என்ன?**

இந்த வேலைத் திட்டம் காவேரிக் கலாமன்றத்தின் இயக்குனர் வண. பிதா யோசுவா அடிகளாரின் எண்ணக் கருவுக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஒரு வேலைத் திட்டமாகும். பொது மக்களுக்கான ஒரு விழிப்புணர்வுட்டலைச் செய்ய வேண்டுமாயின் அக் கூட்டத்தை ஆயத்தப்படுவதற்கான சகல தேவைகளை நிறைவேற்றித் தருகிறார்கள். குறிப்பாக அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள், கலந்து கொள்வோர்களுக்குத் தேவையான உணவு போன்றவற்றை காவேரிக் கலாமன்றமே வழங்கி வருகின்றன. இதற்கு முற்று முழுதான உதவியை அந்த அமைப்புத் தான் செய்கின்றன. கடந்த முறை இலங்கை வங்கிக்குப் பின்னால் இலங்கை படைவீரர்களின் சன சமூக ஒத்துழைப்பு மையம் ஒன்று இருக்கிறது. அவர்கள் மண்டபத்தைத் தந்துதவினார்கள். அது திறந்த மண்டபம். அவர்கள் எங்களிடம் எந்த பண அறவீடும் செய்ய வில்லை. இலவசமாகத் தந்தார்கள்.

இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஆலோசனையைத் தந்தவர் வண. பிதா யோசுவா அடிகளார் ஆவார். உண்மையிலே வண. பிதா யோசுவா அவர்களுடைய எண்ணக் கருக்களுடைய வெளிப்பாடுதான் இது ஒரு வீட்டுத் தோட்டத்தை செய்வது என்றால் எப்படிச் செய்ய வேண்டும். காளான் செய்கை, தேனி வளர்ப்பு போன்றவற்றை எப்படிச் செய்கை பண்ண வேண்டும் என்பது பற்றி தெளிவூட்டல்கள் வழங்குவதோடு மட்டுமல்ல அதற்குத் தேவையான பயிற்சிகளையும் வளங்களையும் பெற்றுக் கொடுக்கவுள்ளோம்.

ஒரு தாய் வீட்டுத் தோட்டச் செய்கை பண்ணிக் கொண்டு தன் பொருளாதார தேவையை நிறைவு செய்வதற்கான வழிகாட்டல்களை மெல்ல மெல்ல நகர்த்தி வருகின்றோம். தானாகவே தங்களது பொருளாதாரத்தை வீட்டில் இருந்தவாறு வலுப்படுத்திக் கொள்ள முடியும். கிளிநொச்சி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது மட்டுமல்ல அவர்களுடைய பொருளாதாரத்தை பாதுகாத்தல் நடவடிக்கைகளிலும் இவ்வமைப்பு ஈடுபட்டு வருகிறது என்று கூறலாம்.

உடல் ரீதியிலான சுகாதார தேவை எனக் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய அதிகாரிகளை தொடர்பு படுத்தி கொடுக்கின்ற பணிகளையும் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். இப்படி பல பணிகள் உள்ளன என்றார்.

இக்பால் அலி

# நகர்வலம்



## வருடத்தின் முதல் காலாண்டு நிறைவடைவதற்குள் அரசாங்க ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்த வருடத்தின் முதல் காலாண்டு நிறைவடைவதற்குள் அரசாங்க ஊழியர்களுக்காக விசேட கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரசாங்கம் பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள போதும் அரசாங்க ஊழியர்களுக்கான ஏப்ரல் மாத சம்பளத்தை இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பதாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.



அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், அரசாங்க ஊழியர்கள் என்ற வகையில் நாட்டின் தலைவரான ஜனாதிபதியும் அரசாங்கமும் அவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியே செயற்பட்டுவருகின்றனர்.

பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள பல்வேறு நாடுகள் அந்த நிலையை சீர்செய்வதற்காக முதலில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் கைவைக்கவே முற்படுகின்றன. எமது நாட்டில் அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. பணவீக்கம் மற்றும் வரி அதிகரிப்பு காரணமாக அரசாங்க ஊழியர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளனர் என்பதை நாம் அறிவோம்.

ஏப்ரல் மாதத்தில் எமக்கு பெருமளவு நிதி சுமை ஏற்படுகிறது. வழமையாகவே மாதத்தின் இறுதியில் 25 ஆம் திகதியில் அவர்களுக்கான சம்பளம் வழங்கப்படும். எனினும் ஏப்ரல் மாதத்தில் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு 10 ஆம் திகதிக்கு முன்பதாக அவர்களுக்கு சம்பளம் வழங்குவதாக அரசாங்கம் பெரும் நிதிச் சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அதேபோன்று ஓய்வூதியம் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவுகளையும் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்பதாக வழங்கவேண்டியுள்ளது. நிதி முகாமைத்துவம் செய்யப்பட்டு அதனை வழங்கியே ஆகவேண்டுமென ஜனாதிபதியும் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் போது இந்த வருட இறுதியில் அரசாங்க ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்குவதாக ஜனாதிபதி கூறியிருந்தார். எனினும் இந்த வருடத்தின் முதல் காலாண்டு நிறைவடைவதற்குள் விசேட கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புத்தளம் பாத்திமாவுக்கு புதிய அதிபர் நியமனம்



**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் பாத்திமா கல்லூரியின் 26ஆவது அதிபராக பாடசாலையின் பழைய மாணவியான திருமதி சரீனா பர்வீன் அஜ்மல் (30) உத்தியோக பூர்வமாக அதிபர் கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

புத்தளம் பாத்திமா கல்லூரியில் நிதி மற்றும் நிர்வாகத்துக்கான பிரதி அதிபராகக் கடமையாற்றிய சரீனா பர்வீன் அஜ்மல், 2004ஆம் ஆண்டு முதல் கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சமூகக் கல்வி ஆசிரியராக தனது பணியினை ஆரம்பித்து, புத்தளம் வெட்டாளை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் 9 வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.

2016 இல் இலங்கை அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று கடந்த 6 வருடங்களாக புத்தளம் பாத்திமாக் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய சரீனா பர்வீன், அப்துல் லதீப் றஹ்மத் ஆகியோரின் மூன்றாவது புதல்வி ஆவார்.

## தெலுங்கு காங்கிரஸின் விசேட நிகழ்வு



அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் இவ்வருடத்துக்கான தெலுங்கு உகாதி புத்தாண்டிற்கான ஆரம்ப நிகழ்வை கடந்த வெள்ளிக்கிழமை கொண்டாடியது.

கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணு ஆலயத்தில் அதன் பிரதம குரு சிவஸ்ரீ க.ஜெனார்த்தன தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வினை அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் தலைவர் எம்.அன்பழகன் ஏற்பாடு செய்திருந்தார்.

பிரதம அதிதியாக கலைஞரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகருமான ராதாமேத்தா கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக கலைஞர் சிவா பிரதீபன், சமூக சேவையாளர் க.சசிகுமாரனும் பங்கேற்றனர்.

## கொரிய அரசின் நிதியுதவியில் கம்புறுகமுவ பகுதியில் புதிய வைத்தியசாலை திறந்து வைப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**





கொரியா நாட்டின் 'கொய்க்கா' சர்வதேச அமைப்பினால் மாத்தறை கம்புறுகமுவ வைத்தியசாலை பூமியில் புதிதாக அமைக்கப்பட்ட பிரசவ மற்றும் சிறுவர் பராமரிப்பு வைத்தியசாலையை கொரிய அரசினால் சுகாதார அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சுமார் 9 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைக்கப்பட்ட இவ் வைத்தியசாலை திறப்பு விழா சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, கொரிய நாட்டின் இலங்கை தூதுவர் சந்துஷ் ஆன்ஜின் பங்கேற்புடன் நடைபெற்றது. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மாத்தறை அரசினர் வைத்தியசாலையை கம்புறுகமுவ பகுதிக்கு இடமாற்றம் செய்யும் அரசின் வேலைத் திட்டத்துக்கமைய 2008ம் ஆண்டு கொரிய நாட்டு அரசின் நிதியுதவியுடன் இவ் வைத்தியசாலை நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் சுகாதார அமைச்சின் செயலாளர் உட்பட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாத்தறை வைத்தியசாலை வைத்தியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## லேக்ஹவுஸ் மீடியா அகடமி நடாத்தும் 'டிப்ளோமா இன் ஜர்னலிசம்' பாடநெறி

### கலாநிதி ரங்க கலன்சூரிய கலந்து விரிவுரை



லேக்ஹவுஸ் மீடியா அகடமியால் நடத்தப்படும் 'டிப்ளோமா இன் ஜர்னலிசம் அண்ட் கம்யூனிகேஷன்' பாடநெறி ஒவ்வொரு வார இறுதியிலும் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் அடங்கிய நிபுணர் குழுவினால் நடத்தப்படும் இந்த பாடநெறியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விரிவுரையில் இலங்கையின் வெகுஜன ஊடகத்துறையில் முதல் கலாநிதி ரங்க கலன்சூரிய கலந்துகொண்டு மாணவர்களுக்கு விரிவுரை வழங்கியபோது...

## கொத்தலாவல பாதுகாப்பு பல்கலையில் இப்தார் நிகழ்வு





வரலாற்றில் முதல் முறையாக ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் முப்படை வீரர்கள் மற்றும் இளமானி பட்டக்கலை மாணவர்களின் பங்கேற்புடன் இப்தார் நிகழ்வொன்று அண்மையில் நடைபெற்றது.

இந்த இப்தார் நிகழ்வானது அண்மைக் காலத்தில் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சகல மத மாணவர்களும் ஒரே இடத்தில் நோன்பு திறந்த ஒரு வரலாற்று முக்கிய நிகழ்வாகும். இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் மேஜர் ஜெனரல் எம்.பி. பீரிஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக உலமா சபை நிறைவேற்றுக்குழு உறுப்பினர் மௌலவி எம் ஃபாஸில் பாரூக் கலந்து கொண்டு நோன்பின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். பிரதி உபவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்), பிரிகேடியர் விக்கிரமசிங்க, பிரதி உபவேந்தர் (கல்வி), பேராசிரியர் தம்மிக்க, பீடாதிபதிகள், நிகழ்வின் அனுசரணையாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் சகல மதத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 300க்கும் மேற்பட்ட மாணவர்களும் இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்பு தமிழ்ச் சங்கம் முன்னோடி சமூகப் பெண்களை கௌரவித்தது. வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முஸ்லிம் இளம் மாதர் அமைப்பின் தலைவி பவாசா தாஹாவுக்கு நிகழ்வின் தலைவி மிதிலாபத்மநாதன் பரிசு வழங்கி கௌரவித்தார்.

## நாச்சியாதீவு விவசாயிகளுக்கும் இலவச பசளை விநியோகம்

### விவசாயிகள் நன்றி தெரிவிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அரசாங்கத்தினால் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்படும் Triple super phosphate (T S P) சேற்றுப் பசளை அ / ஹிதோகம விவசாய வதிவிடப் பிரிவின் நாச்சியாதீவு பகுதி விவசாயிகளுக்கும் இலவசமாக அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

நாச்சியாதீவு புதிய நகரில் அமைந்துள்ள பசளை களஞ்சியசாலையில் வைத்து, நாச்சியாதீவு அல் அக்ஸா விவசாய கழக மேற்பார்வையின் கீழ் கடந்த மார்ச் 25, 28 ஆகிய திகதிகளில் இவ் இலவச பசளை வழங்கும் நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன. ஏக்கர் ஒன்றுக்கு 20 கிலோ கிராம் என்ற அடிப்படையில் இப்பசளை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இது பற்றி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்ததோடு, கடந்த காலங்களில் தாம் சேற்றுப் பசளை இன்றியே நெல் விவசாயத்தில் ஈடுபட்டதாகவும் இம்முறை அரசாங்கம் முன் வந்து அதை இலவசமாக பெற்றுத்தந்ததால் தாம் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்தனர்.

கடந்த பெரும் போகத்தின் போது யூரியா இரசாயன பசளை தமக்கு கிடைத்ததால் நெல் உற்பத்தியில் ஓரளவு வெற்றி கண்டதாக தெரிவித்த விவசாயிகள், சேற்றுப் பசளையை பாவித்து இம்முறை வரும் சிறு போகத்தில் நல்ல விளைச்சலை எதிர்பார்க்க கூடியதாவிருக்கும் எனவும் தெரிவித்தனர்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சியான "சுபாவித கீ" எனும் இசை நிகழ்ச்சி திங்கட்கிழமை (3) பகல் மருதானை ஆனந்தா கல்லூரியில் நடைபெற்றபோது, பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த கல்லூரியின் அதிபர் ரன்திக பெரேரா சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், ஆகியோர் இணைந்து மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குவதையும் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

## பேருவளை பிரதேச செயலகத்தில் முழு நாள் நடமாடும் சேவை

பேருவளை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள நடமாடும் சேவையொன்று முழுநாள் நிகழ்வாக எதிர்வரும் 06 ஆம் திகதி பேருவளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறவுள்ளது.

பேருவளை உள்ளிட்ட அதனையண்டிய பிரதேசங்களில் வாழும் மக்களின் நன்மை கருதி இந்த நடமாடும் சேவை நடத்தப்படுவதாகவும் இந்தச் சந்தர்ப்பத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறும் பேருவளை பிரதேச செயலாளர் எம். ரஞ்சன் பி பெரேரா பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி நடமாடும் சேவை நிகழ்வில் பிறப்புச் சான்றிதழ், விவாக பதிவுச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட சேவைகள் இடம்பெறுவதுடன் அப்பிரதேசங்களில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை பெற்றுக்கொள்ளவும் இலவசமாக விவாக பதிவை மேற்கொள்ளவும் முடியும் என்றும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறந்த பாலர் பாடசாலை ஆசிரியையாக தெரிவு

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

பலாகல, கல்நேவ ஆகிய இரு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிங்கள, தமிழ் மொழிப் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஏழு நாள் பயிற்சி செயலமர்வு கல்நேவ பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன் இறுதிநாளான இம்மாதம் 01 ஆம் திகதி இடம்பெற்ற சிங்கள மொழி மூலம் எழுத்துப் பரீட்சையில் நெல்லியகம அல் மதீனா பாலர் பாடசாலை ஆசிரியை எம்.எஸ். ரிஸ்வானா சிங்கள, தமிழ் மொழி ஆசிரியைகளுடன் இரண்டாவது அதி கூடுதலான புள்ளிகளைப் பெற்றதுடன், சிறந்த பாலர் பாடசாலை ஆசிரியையாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.



# மாத்தளை ஸ்ரீ குமரன் ஆரம்ப பாடசாலை தசாப்த விழா

*மாத்தளை சுழற்சி நிருபர்*

*மாத்தளை ஸ்ரீ குமரன் ஆரம்ப பாடசாலையின் 10 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு தசாப்த விழாவை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வித்தியாலய அதிபர் என். சந்திரசேகரன் தெரிவித்தார். ஆயிரம் பாடசாலைகள் வேலைத்திட்டத்தின் கீழ் 2013.11.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ குமரன் ஆரம்ப பாடசாலை 2023.11.01 ஆம் திகதி 10 வருட பூர்த்தியை கொண்டாடவுள்ளது.*

# இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோருதல்

எலவெல்ல வீதி, ஹித்தெட்டிய, மாத்தறையில் வசிக்கும் பத்தேகெதர ரஞ்சித் அபேசிங்க ஆகிய நான் பாவனைக்கு பாதுகாப்பற்ற முறையில் குறித்த பிரகெப்லின் (Pregablin) எனும் மருந்தை விற்பனை செய்த குற்றத்திற்காக 83200ஆம் இலக்க வழக்கின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் 20,000.00 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்தக் குற்றத்தை மீண்டும் நான் செய்யமாட்டேன் என பிரகடனப்படுத்துவதோடு செய்த குற்றம் தொடர்பாக சகல இலங்கை மக்களிடமும் மன்னிப்பைக் கோருகின்றேன்.

**பத்தேகெதர ரஞ்சித் அபேசிங்க**

# நுவரெலியாவில் உணவகங்களில் பரிசோதகர்கள் திடீர் சோதனை



*நுவரெலியாவில் ஏப்ரல் வசந்தகால நிகழ்வு மற்றும் சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு நுவரெலியா மாநகரசபை சுகாதார பிரிவினரால் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.*

*நுவரெலியா நகரில் ஐம்பது பேர் கொண்ட பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மருந்து உணவு பரிசோதனை அதிகாரிகளால் நேற்று காலை முதல் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.*

*நுவரெலியா மாநகரத்தில் ஹோட்டல்கள், வெதுப்பகங்கள், பழங்கள் விற்பனை நிலையங்கள், இறைச்சி மற்றும் மரக்கறி கடைகள், மருந்தகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடி கடைகள், பலசரக்கு கடைகள் என சோதனைக்குட்படுத்தினர்.*

*இதன்போது பொது மக்களின் பாவனைக்குதவாத கடலை, பருப்பு உளுந்து போன்ற தானிய வகைகள், குளிர்சாதன பெட்டிகளில் வைத்திருந்த இறைச்சி மற்றும் உணவு பொருட்கள் மற்றும் காலாவதியான தின்பண்டங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.*

*அதேநேரத்தில் இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்களை விற்பனை செய்த கடைகள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகளும் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

# மலைச்சாரல்



பண்டாரவளை கிரேக் தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் விவேகானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கி வைத்தார்.


## பெறுகை அறிவித்தல்

**மின்வலு மற்றும் சக்தி அமைச்சு**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**

**2 எண்ணிக்கையான மோட்டார் கார்கள் மற்றும் 01 எண்ணிக்கையான முள்தூக்கி ஆகியவற்றின் அகற்றல்**

**B/12/2023**

02 எண்ணிக்கையான மோட்டார் கார்கள் மற்றும் 01 எண்ணிக்கையான முள்தூக்கி ஆகியவற்றின் அகற்றலுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ளவாறு தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.

2023.04.20 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமான 2,000 ரூபாவை (1,696.71 ரூபா + 2.5 SSCL + 15% பெசேவ) இபெகூ இற்கு செலுத்திய பின்னர் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 01 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023.04.21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

அகற்றப்படவுள்ள உருப்படிகள் இபெகூ இன் தலைமை அலுவலக இடப்பரப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் பரீட்சித்தலானது களஞ்சியசாலைகளுக்கான சிரேஷ்ட அலுவலருடன் மேற்கொள்ளப்படும் சந்திப்பு முன்னேற்பாட்டுடன் ஏற்பாடு செய்யப்படலாம்.

011-5455336 என்ற தொலைபேசி இலக்கத்தின் வழியாக அல்லது 011-5455424 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாக களஞ்சியசாலைகளுக்கான சிரேஷ்ட அலுவலகரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**



## பகிரங்கமாக விற்பனை செய்தல்

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை**

**சுமார் 7470 வெள்ளை முட்டைகள் மற்றும் சுமார் 3080 பழுப்புநிற முட்டைகளை பகிரங்கமாக விற்பனை செய்தல்**

ஹெட்டிபொல நீதவான் நீதிமன்ற அதிகாரப் பிரதேசத்தினுள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் கைப்பற்றப்பட்ட முட்டைகள் 2023-04-06ஆம் திகதி பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 59(1) அத்தியாயத்தின் பிரகாரம் பகிரங்கமாக விற்பனை செய்யப்படும்.

இடம் : M.C.M. பார்ம், ரபேவ, சுனந்தபுர
திகதி : 2023-04-06

01. 2023-04-06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பகிரங்கமாக விற்பனை செய்யப்படும் என்பதுடன் கொள்வனவாளர்கள் மு.ப. 11.00 மணிக்கு முன்வருதல் வேண்டும் என்பதுடன் அதன் பின் முன்வரும் கொள்வனவாளர்கள் நிராகரிக்கப்படுவர்.
02. விற்பனையிடத்திற்கு பிரவேசிப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 014-1-001-2-0110475 இலக்க மக்கள் வங்கி கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவை வைப்புச் செய்த பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. தெரிவுசெய்யப்பட்ட வெற்றிகரமான கொள்வனவாளர்/கொள்வனவாளர்கள் தமக்குரித்தான கொள்வனவு செய்யப்பட்ட முட்டைத் தொகையை சான்றுபடுத்தும் பொருட்டு அதிகார சபையினால் அவ்வேளையிலேயே கடிதமொன்று வழங்கப்படும்.
04. குறித்த கடிதம் கிடைக்கப்பெற்றதன் பின் மேற்படி 02ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின் குறித்த தொகை முட்டைகள் விடுவிக்கப்படும்.
05. ஒரே விலைக்கு கொள்வனவு செய்வதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட கொள்வனவாளர்கள் முன்வருவார்களானால் கொள்வனவாளர்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்கான முழுமையான தீர்மானத்தை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தன்னகத்தே கொண்டுள்ளது.
06. கொள்வனவாளர்கள் விலைகளைச் சமர்ப்பிக்கும்போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அதிகூடிய விலைகள் தொடர்பில் கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

| | |
|---|---|
| பழுப்புநிற முட்டை | குறைந்தபட்ச விலை 41.00 ரூபா<br>அதிகூடிய விலை 46.00 ரூபா |
| வெள்ளைநிற முட்டை | குறைந்தபட்ச விலை 39.00 ரூபா<br>அதிகூடிய விலை 44.00 ரூபா |

அதேபோல், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் விதிக்கப்பட்டுள்ள 2023-01-20ஆம் திகதிய 2315/57ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகூடிய சில்லறை விலையை விட கூடுதலாக விலைகளைக் கோரும் விண்ணப்பங்கள் செல்லுபடியாகாது.

**பணிப்பாளர் நாயகம்,**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,**
**இல. 27, சதொச பொதுச் செயலக கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**
**இது தொடர்பான மேலதிக விசாரணைகளுக்கு: 0701028990, 0783634173**


# பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதிய தலைவராக பாரத் அருள்சாமி நியமனம்



*பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக அரசியல், தொழிற்சங்க சமூக மற்றும் சர்வதேச செயற்பாட்டாளரான பாரத் அருள்சாமி நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் இவருக்கான நியமனம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.*

*பெருந்தோட்ட துறையின் மனிதவள அபிவிருத்தி, உட்கட்டமைப்பு மற்றும் துறைசார் அபிவிருத்திக்கு பொறுப்பாக செயற்படும் மிக முக்கிய நிறுவனமே பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமாகும். நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்நிறுவனம் இயங்கி வருகின்றது.*

*பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக இதற்கு முன்னரும் பாரத் அருள்சாமி பதவி வகித்துள்ளார். அவருக்கு மீண்டும் அப்பதவி வழங்கப்பட்டுள்ளது.*

*இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவராகவும் பாரத் அருள்சாமி பதவி வகிக்கின்றார்.*

*அக்கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பாளராகவும் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி பிரதேச அமைப்பாளர் நியமனம்

*தலவாக்கலை குறூப் நிருபர்*



*நுவரெலியா, மஸ்கெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த ஆகிய ஐந்து பிரதேச செயலக பிரிவுகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதேச அமைப்பாளர்களாக ரத்தன ஹிமி, ராமச்சந்திரன் விஜயகுமார், சிவசாமி பத்மநாதன், மொஹமட் மக்கீம் மொஹமட் மசூர், ராசையா ரஜனிகாந்த் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமன கடிதங்களை நேற்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட தமிழ் பிரதிநிதிகளின் குழுத்தலைவரும் நுவரெலியா தொகுதி அமைப்பாளருமான கலாநிதி சதானந்தன் திருமுருகன் ஆகியோர் வழங்கினர்.*

# துப்பாக்கிச் சூட்டு சம்பவம் : ஒருவர் பலி

*பதுளை தினகரன் விசேட நிருபர்*

*கதிர்காமம்–வெடிஹிதி கந்த வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.*

*மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வெடிஹிதி கந்த பகுதியிலுள்ள கார் நிறுத்துமிடத்தில் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். சந்தேகநபர்கள் உடனடியாக அங்கிருந்து தப்பிச் சென்றமையால், யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.*

*காயமடைந்தவர் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த 46 வயதுடைய பிரதீப் லக்மால் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.*

*அவர் தற்போது கதிர்காமம் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். எவ்வாறாயினும், துப்பாக்கிச் சூட்டின் போது பின்னால் இருந்தவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை.*

*துப்பாக்கிச் சூடு தொடர்பான மேலதிக விசாரணைகளை கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

# சட்டவிரோத மாடு அறுக்கும் இடம் பொலிஸாரால் சுற்றிவளைப்பு

*அக்குறணை, குருகொட பிரதேசத்தில் வாகனம் பழுது பார்க்கும் இடம் என்ற போர்வையில் சட்டவிரோதமாக மாடுகளை அறுக்கும் இடமொன்றை நடத்திய மூவரை அலவத்துகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*பொலிஸ் அவசர பிரிவுக்கு நேற்றுமுன்தினம் (02) கிடைத்த தகவலின் பிரகாரம் அவ்விடத்துக்குச் சென்ற பொலிஸார் சட்டவிரோதமாக மாடு அறுக்கும் இடத்தை கண்டுபிடித்துள்ளனர்.*

*இவ்விடம் வாகனம் பழுது பார்ப்பதற்காக (கராஜ்) வாடகைக்கு விடப்பட்டதாகவும், இதிலுள்ள உள் அறையை மாடுகளை வெட்டுவதற்கு பயன்படுத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*சுற்றிவளைப்பின் போது வெட்டப்பட்ட மாட்டின் சுமார் 147 கிலோகிராம் இறைச்சி மற்றும் இவ்விடத்தை வாடகைக்கு எடுத்தவர் மற்றும் மாட்டை அறுப்பதற்கு உதவிய இருவர் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*பொலிஸார் கைப்பற்றிய மாட்டிறைச்சி தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களையும் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*அலவத்துகொட பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் சுஜீவ குணதிலக்கவின் பணிப்புரையின் பேரில் குற்றப்புலனாய்வுப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உபாலி கருணாவன்ச, சார்ஜன்ட் சமரகோன், ஜயந்த, செனரத் ஆகியோரினால் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.*


## கேள்வி அறிவித்தல் சபை நிதி வேலைத்திட்டம் 2023
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் மாத்தளை வடக்கின் கந்தபல்ல கோறளையின் கலேவெல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் கும்புக்கொல்ல கிராம சேவகர் பிரிவிற்குள், கும்புக்கொல்ல கிராமத்தில் அமைத்துள்ள "வட்டக்காஹேன" என. அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஆர்.எம். ஜயசுந்தர என்பவரால் 2011.03.30ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4055ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 2 பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: பாரிஸ் சுகததாச என்பவரால் உரிமை கோரப்படும் FVP 354ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 184 மற்றும் 4055ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 1 கிழக்கு: பாரிஸ் சுகததாச என்பவரால் உரிமை கோரப்படும் FVP 354ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 184 தெற்கு: பிரதான வீதியிலிருந்து வீடுகளுக்குச் செல்லும் பாதை மேற்கு: 4055ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 1 ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த லொட் 2 எனக் காட்டப்படும் காணியின் பரப்பளவானது இரண்டு றூட் மற்றும் முப்பத்தைந்து பேர்ச் (ஏ.00- றூ.02-பே.35) ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு ஜே.கே. நவரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.08.07ம் திகதியிடப்பட்ட 2245ம் இலக்க பிரதான பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட நான்காது ஆதன அட்டவணை:**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் மாத்தளை வடக்கின் கந்தபல்ல கோறளையின் கலேவெல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் கும்புக்கொல்ல கிராம சேவகர் பிரிவிற்குள், கும்புக்கொல்ல கிராமத்தில் அமைத்துள்ள "லிதகாவஹேன, வட்டக்காஹேன, வரதம்முனே குடுமிரிஸ்ஹேன், மில்லவனேஹேன, கல்கொட்டுவேஹேன மற்றும் கெத்ரகாவஹேன" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஜே.எம். ஜயசேகர என்பவரால் 2001 ஒக்டோபர் 19ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 9874ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 1 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: கிராமத்திலிருந்து கல்லேவலையை நோக்கிய பாதை கிழக்கு: வீதி மற்றும் குறித்த 9874ம் இலக்க நிலவரைபடத்தில் லொட் 2 தெற்கு: 9874ம் இலக்க நிலவரைபடத்தில் லொட் 2 அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட நிலவரைபடத்தின் லொட் 185 மேற்கு: லொட் 185 ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த லொட் 1 எனக் காட்டப்படும் காணியின் பரப்பளவானது இரண்டு ஏக்கர் (ஏ.02-றூ.00-பே.00) ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு ஜே.கே. நவரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.08.07ம் திகதியிடப்பட்ட 2246ம் இலக்க பிரதான பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட ஐந்தாவது ஆதன அட்டவணை:**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் மாத்தளை வடக்கின் கந்தபல்ல கோறளையின் கலேவெல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் கும்புக்கொல்ல கிராம சேவகர் பிரிவிற்குள், கும்புக்கொல்ல கிராமத்தில் அமைத்துள்ள "வட்டக்காஹேன" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஆர்.எம். ஜயசுந்தர என்பவரால் 2011.03.30ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4055ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 1 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: வீதி மற்றும் பாரிஸ் சுகததாச என்பவரால் உரிமை கோரப்படும் காணி கிழக்கு: பாரிஸ் சுகததாச என்பவரால் உரிமை கோரப்படும் FVP 354ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 184 மற்றும் ரஞ்சன் குமார திசாநாயக்க என்பவரால் உரிமை கோரப்படும் 4055ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 2 தெற்கு: மற்றும் மேற்கு: வீதி ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த லொட் 1 எனக் காட்டப்படும் காணியின் பரப்பளவானது ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் முப்பது பேர்ச் (ஏ.01-றூ.01-பே.30) ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு ஜே.கே. நவரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.08.07ம் திகதியிடப்பட்ட 2247ம் இலக்க பிரதான பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**(திருமதி) வீ.ஏ. பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**

## பெறுகை அறிவித்தல்

### சுகாதார அமைச்சு

**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனம்**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**

### மின் பிறப்பாக்கி இயந்திர பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளுக்காக Manual Change Over பொருத்துதல்

01 மாளிகாவத்தை, ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக இதில் தகைமை வாய்ந்த இலங்கையில் விற்பனை செய்வதற்கான வியாபாரப் பதிவைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்து 2023-04-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இல. | உருப்படிகள் |
|---|---|
| 01 | மின் பிறப்பாக்கி இயந்திர பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளுக்காக Manual Change Over பொருத்துதல் |

01. விலைமனு ஆவணங்களை 2023-04-04ஆம் திகதி முதல் 2023-04-21ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதற்காக பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(அ) பெறுகைக் குழுவின் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்தல்

(ஆ) ஒவ்வொரு விலைமனுவிற்கும் 2,500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை குறித்த ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் சிறாப்பர் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல்

(ஈ) தமது உற்பத்திக்கான உள்நாட்டு முகவராக நியமிக்கப்பட்டுள்ளமைக்கான முதன்மையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் / கடிதமொன்றைச் சமர்ப்பித்தல்.

02. இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறாக 2023-04-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைகள் உள்ளிடும் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம்.

03. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து அதாவது 2023-04-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

04. விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**
**தொ.பே. 011-2422335 / 011 2422336**

## பெறுகை அறிவித்தல்

### சுகாதார அமைச்சு

**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனம்**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**

### Fully Automated Biochemistry Analyzer ஒன்றைக் கொள்வனவு செய்தல்

01 மாளிகாவத்தை, ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக இதில் தகைமை வாய்ந்த இலங்கையில் விற்பனை செய்வதற்கான வியாபாரப் பதிவைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்து 2023-04-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இல. | உருப்படிகள் |
|---|---|
| 01 | Fully Automated Biochemistry Analyzer ஒன்றைக் கொள்வனவு செய்தல் |

01. விலைமனு ஆவணங்களை 2023-04-04ஆம் திகதி முதல் 2023-04-21ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதற்காக பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(அ) பெறுகைக் குழுவின் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்தல்

(ஆ) ஒவ்வொரு விலைமனுவிற்கும் 1,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை குறித்த ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் சிறாப்பர் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல்

(ஈ) தமது உற்பத்திக்கான உள்நாட்டு முகவராக நியமிக்கப்பட்டுள்ளமைக்கான முதன்மையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்/ கடிதமொன்றைச் சமர்ப்பித்தல்.

02. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (Pre-Bid Meeting) 2023-04-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இந்த நிறுவனத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

03. இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறாக 2023-04-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைகள் உள்ளிடும் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம்.

04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து அதாவது 2023-04-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

05. விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**
**தொ.பே. 011-2422335 / 011 2422336**

The Housewives' companion
Classifieds on
Daily News

## எல் பீ பினான்ஸ் பி.எல்.சி
## பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் | திகதி | முகவரி |
|---|---|---|
| 02/08/09/15 | மே 2023 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 02/08/09/15 | மே 2023 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 02/08/09/15 | மே 2023 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 02/08/09/15 | மே 2023 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 02/08/09/15 | மே 2023 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 03/10/16/22 | மே 2023 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 03/10/16/22 | மே 2023 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 03/10/16/22 | மே 2023 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 04/11/17/23 | மே 2023 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 04/11/17/23 | மே 2023 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 04/11/17/23 | மே 2023 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 419, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 04/11/17/23 | மே 2023 | இல. 69, தெஹிவளை வீதி, மஹரகம. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 04/11/17/23 | மே 2023 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 04/11/17/23 | மே 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 04/11/17/23 | மே 2023 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 12/18/24/29 | மே 2023 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 12/18/24/29 | மே 2023 | இல. 14, புதிய நகரம், திகன |
| 12/18/24/29 | மே 2023 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 89, லோவர் வீதி, பதுளை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 12/18/24/29 | மே 2023 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 12/18/24/29 | மே 2023 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 530, அளுத் மாவத்தை சாலை, கொழும்பு 15. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 12/18/24/29 | மே 2023 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 12/18/24/29 | மே 2023 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 12/18/24/29 | மே 2023 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 12/18/24/29 | மே 2023 | பிரதான வீதி, பொத்துவில். |
| 12/18/24/29 | மே 2023 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 19/25/26/30 | மே 2023 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 19/25/26/30 | மே 2023 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 252B, மற்றும் 252/1, கண்டி வீதி திருகோணமலை. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 19/25/26/30 | மே 2023 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 19/25/26/30 | மே 2023 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 19/25/26/30 | மே 2023 | பிரதான வீதி கிரண். |
| 19/25/26/30 | மே 2023 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 19/25/26/30 | மே 2023 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 19/25/26/30 | மே 2023 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 19/25/26/30 | மே 2023 | பிரதான வீதி, திருக்கோவில் - 01 |
| 19/25/26/30 | மே 2023 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 19/25/26/30 | மே 2023 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 19/25/26/30 | மே 2023 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 19/25/26/30 | மே 2023 | பிரதான வீதி வவுணதீவு |
| 19/25/26/30 | மே 2023 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 19/25/26/30 | மே 2023 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 19/25/26/30 | மே 2023 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 19/25/26/30 | மே 2023 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 19/25/26/30 | மே 2023 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 19/25/26/30 | மே 2023 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 19/25/26/30 | மே 2023 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 19/25/26/30 | மே 2023 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 19/25/26/30 | மே 2023 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 19/25/26/30 | மே 2023 | பிரதான வீதி, மல்லாவி |
| 19/25/26/30 | மே 2023 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 19/25/26/30 | மே 2023 | இல 3, 5 வல்லை வீதி சங்கானை. |
| 19/25/26/30 | மே 2023 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |
| 19/25/26/30 | மே 2023 | இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 19/25/26/30 | மே 2023 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 19/25/26/30 | மே 2023 | 575, K.K.S வீதி, தெல்லிப்பனை கிழக்கு, தெல்லிப்பளை |
| 19/25/26/30 | மே 2023 | எண்.12, வார்டு எண்.06, பிரதான வீதி, பேசாலை, மன்னார் |
| 19/25/26/30 | மே 2023 | பிரதான வீதி மருதங்கேணி |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

**LB FINANCE**
உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## புனித சூசையப்பர் அணிக்கு வெற்றி

**தம்பலகாமம் நிருபர்**

திருகோணமலை பாடசாலைகள் உதைபந்து அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு எதிரான கால்பந்து போட்டியில் புனித சூசையப்பர் கல்லூரி அணி 4–1 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

20 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் நடைபெற்ற இந்தப் போட்டி ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (01) நடைபெற்றது.

ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்திய புனித சூசையப்பர் கல்லூரி அணி அடுத்தடுத்து கோல்களைப் பெற்று முன்னிலை பெற முடிந்தது. இப்போட்டியின் சிறந்த வீரராக புனித சூசையப்பர் கல்லூரி வீரர் கே. மிதுஷன், நட்சத்திர வீரராக ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வீரர் எஸ்.எம். முகீத் தெரிவாகினர்.

# எதிரணியை 115 ஓட்டத்திற்கு மட்டுப்படுத்தியது யாழ். மத்தி



பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட பிரிவு மூன்றுக்கான ஏ குழு கிரிக்கெட் போட்டியின் அரையிறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி ஹோமாகம, மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியை முதல் இன்னிங்ஸில் 115 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது.

கொழும்பு, தேஸ்டன் மைதானத்தில் நேற்று (03) ஆரம்பமான இரண்டு நாட்கள் கொண்ட இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. எனினும் அபாரமாக பந்துவீசிய யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் எதிரணிக்கு ஆரம்பம் தொடக்கம் சவால் கொடுத்தனர். 15 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட்டை வீழ்த்திய யாழ். மத்திய கல்லூரி குறுகிய இடைவெளியில் அடுத்தடுத்த விக்கெட்டுகளை பதம்பார்த்தது. இதனால் மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி 50.4 ஓவர்களில் 114 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

மத்திய வரிசையில் பசிந்து லொக்சித்த பெற்ற 25 ஓட்டங்களுமே அதிகமாகும். இந்த ஓட்டங்களை பெற அவர் 73 பந்துகளுக்கு முகம்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது யாழ். மத்திய கல்லூரி சார்பில் அபாரமாக பந்துவீசிய ரஞ்சித் குமார் நியுடன் மற்றும் சுதர்ஷன் அனுஷாந்த் தலா 3 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு விக்னேஸ்வரன் பருதி 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இன்று (04) போட்டியின் இரண்டாவது மற்றும் கடைசி நாளாகும்.



கொழும்பு, புனித சூசையப்பர் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற பொன்ஜின் இல்லத்தின் தலைவன் பிரதம அதிதியான இலங்கை இராணுவத் தளபதி ஷிரான் அபேசேகரவிடம் இருந்து வெற்றிக் கேடயத்தை பெற்றுக்கொள்வதை படத்தி காணலாம். கல்லூரி அதிபர் அருட்தந்தை ரஞ்சித் அன்ராடி மற்றும் ஆசிரியர்களும் அருகில் உள்ளனர். (படம்: வத்தளை விசேட நிருபர்)

## ஆரம்பத்தரத்தில் கராத்தே மாணாக்கருக்கு சான்றிதழ்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



ஐ.எம்.ஏ ஸ்ரீ லங்கா சம்மேளனம் வவுனியா டோஜோவின் ஆரம்ப தரத்தில் உள்ள கராத்தே மாணவர்களுக்கான முதலாவது தரப்படுத்தல் பரீட்சை அண்மையில் வவுனியா முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட ஐ.எம்.ஏ ஸ்ரீ லங்கா சம்மேளனத்தின் தலைவர் பி. மிதுஷன், செயலாளர் பி. ஆகாஷ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தரப்படுத்தல் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கராத்தே சம்மேளன தலைவரும், தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உடற்கல்வித்துறை பொறுப்பதிகாரியுமான முஹம்மது இக்பால் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

# இலங்கை கிரிக்கெட்டுக்கு சனத் தலைமையில் குழு



இலங்கை கிரிக்கெட் சபைக்காக தொழில்நுட்ப ஆலோசனை குழு ஒன்றை விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்துள்ளார்.

இலங்கை அணி முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய தலைமையிலான இந்தக் குழுவில் பர்வீஸ் மஹ்ரூப், அசன்த டி மேல், சரித் சேனநாயக்க மற்றும் கபில விஜேகுணவர்தன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த நியமனம் விளையாட்டு அமைச்சினால் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் சனத் ஜயசூரிய, அசந்த டி மேல் மற்றும் கபில விஜேதுங்க இதற்கு முன்னர் கிரிக்கெட் சபையின் தெரிவுக் குழு தலைவராக செயற்பட்டிருப்பதோடு பர்விஸ் மஹ்ரூப் இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணியின் பயிற்சியாளராகப் செயற்பட்டுள்ளார்.

முன்னதாக விளையாட்டுத் துறை அமைச்சர் நியமித்த கிரிக்கெட் யாப்புக் குழுவில் பர்வீஸ் மஹ்ரூபின் பெயர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அவர் அந்தக் குழுவில் இருந்து பின்னர் விலகிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக் கிரிக்கெட் தொடர்பில் விளையாட்டு அமைச்சர், அமைச்சு அதிகாரிகள் மற்றும் தேசிய விளையாட்டு சபைக்கு ஆலோசனை வழங்குவதே இந்தக் குழுவின் பிரதான பணியாகும்.

முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும், மஹேல ஜயவர்தன தலைமையில் இதனை ஒத்த குழு ஒன்றை நியமித்தபோதும் கடந்த ஆண்டு அவர் தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து அந்தக் குழு கலைக்கப்பட்டது.

# ஆப்கானிடம் ஒருநாள் தொடரை இழந்தது இலங்கை இளையோர்



ஆப்கானிஸ்தான் 19 வயதுக்கு உட்பட்ட அணியுடனான இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் 6 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்த இலங்கை இளையோர் அணி தொடரை 0–2 என முழுமையாக இழந்தது.

அபுதாபி, டொலரன்ஸ் ஓவல் மைதானத்தில் கடந்த ஞாயிறன்று (02) நடைபெற்ற இரண்டாவது இளையோர் ஒருநாள் சர்வதேச போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி 36.5 ஓவர்களில் 161 ஓட்டங்களுக்கே சுருண்டது.

கடைசி வரிசையில் வந்த விஷாஸ் தெளமிக அதிகபட்சமாக 33 ஓட்டங்களை பெற்றார்.

பதிலெடுத்தடிய ஆப்கான் இளையோர் அணி 32.3 ஓவர்களிலேயே 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 162 ஓட்டங்களை எட்டியது.

நூமான் ஷா ஆட்டமிழக்காது 67 பந்துகளில் 72 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

இதன்படி ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை இளையோர் அணி ஆப்கானுக்கு எதிராக ஆடி நான்கு ஒருநாள் போட்டிகளிலும் தோல்வியை சந்தித்து நாடு திரும்பவுள்ளது.

முன்னதாக நடைபெற்ற முக்கோணத் தொடரிலும் இலங்கை இளையோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தமை குறிப்பிடத்தக்கது. பங்களாதேஷ் இளையோர் அணியும் பங்கேற்ற அந்த முக்கோண ஒருநாள் தொடரில் இலங்கை அணி பங்களாதேஷுடனான ஒரு போட்டியில் மாத்திரமே வெற்றியீட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

## சிரியாவில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்



சிரியா மீது இஸ்ரேல் நடத்திய புதிய வான் தாக்குதல் ஒன்றில் இரு ஈரானிய ஆதரவு போராளிகள் கொல்லப்பட்டதாக போர் கண்காணிப்புக் குழு ஒன்று தெரிவித்துள்ளது. இதில் ஐந்து சிரிய படையினர் காயமடைந்ததாக சிரிய அரச செய்தி நிறுவனமான சனா தெரிவித்துள்ளது.

சிரிய மேற்கு நகரான ஹோம்ஸில் கடந்த ஞாயிறன்று இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இஸ்ரேல், சிரியா மீது நடத்தும் மூன்றாவது வான் தாக்குதலாக இது உள்ளது.

ஒரு தசாப்தத்திற்கு மேலாக நீடிக்கும் சிரிய உள்நாட்டுப் போரில், அந்நாட்டின் மீது இஸ்ரேல் நூற்றுக்கணக்கான வான் தாக்குதல்களை நடத்தி இருப்பதோடு ஈரான் ஆதரவுப் படைகள் மற்றும் ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் சிரிய இராணுவ நிலைகளை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

தற்போதைய தாக்குதலில் ஹோம்ஸ் நகரில் வெடிப்பு இடம்பெற்றதாகவும் ஆய்வு நிலையம் ஒன்றில் தீ ஏற்பட்டதாகவும் காண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சிரிய வான் பாதுகாப்பு அமைப்பு பல ஏவுணைகளை இடைமறித்தபோதும், ஐந்து படையினர் காயமடைந்து பொருட் சேதமும் ஏற்பட்டிருப்பதாக சனா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஹொங்கொங்: 15,000 பேர் நாடுகடத்தப்படும் அச்சம்



புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் இறுக்கமான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ள ஹொங்கொங் நிர்வாகம் சுமார் 15 ஆயிரம் பேரை நாடு கடத்தக்கூடிய அச்சம் ஏற்பட்டுள்ளது.

கடந்த டிசம்பரில் நிறைவேற்றப்பட்ட இந்த இறுக்கமான சட்ட விதிகளைத் தொடர்ந்து அங்கு தங்கியுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் மத்தியில் தாம் நாடு கடத்தப்படுவோம் என்ற அச்ச நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு மேன் முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்காக காத்திருக்கும் நபர்களை நாடு கடத்தவும் இச்சட்ட விதிகள் சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினருக்கு அதிகாரமளித்துள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது முதல் 27 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். மேலும் 1100 பேர் உடனடியாக நாடு கடத்தப்படும் நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

# 'ஒபெக்' நாடுகளின் திடீர் எண்ணெய் உற்பத்தி குறைப்பால் விலை உயர்வு

## அமெரிக்கா கடும் அதிருப்தி



உலகின் பல மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளும் உற்பத்தியை குறைக்கும் அறிவிப்பை வெளியிட்டதை அடுத்து எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.

பிரண்ட் மசகு எண்ணெய் விலை பீப்பாய் ஒன்று 5 டொலருக்கு மேல் அல்லது 7 வீதமாக அதிகரித்து நேற்றைய (03) வர்த்தக ஆரம்பத்தில் 85 டொலர்களுக்கு மேல் உயர்ந்திருந்தது.

சவூதி அரேபியா, ஈராக் மற்றும் பல வளைகுடா நாடுகளும் நாளுக்கு ஒரு மில்லியன் பீப்பாய்களுக்கு மேல் குறைப்பதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்ததை அடுத்தே விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

வரும் மே மாதம் மசகு எண்ணெய் உற்பத்தி குறைப்பு அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் சில நாடுகள் ஏற்கனவே உற்பத்தியை குறைக்க ஆரம்பித்துள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததை அடுத்து எண்ணெய் விலை அதிகரித்தபோதும், தற்போது மோதலுக்கு முன்னர் இருந்த நிலைக்கு விலை குறைந்துள்ளது. என்றாலும் எரிசக்தி விலையை குறைக்கும் பொருட்டு உற்பத்தியை அதிகரிக்கும்படி உற்பத்தி நாடுகளை அமெரிக்கா கேட்டிருந்தது.

கடந்த ஆண்டில் வலுசக்தி மற்றும் எண்ணெய் விலை அதிகரித்தது பணவீக்கத்தை உயர்த்தக் காரணமானதோடு அது வீட்டுப் பொருளாதாரத்தில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியது.

ஒபெக் பிளஸ் உற்பத்தி அங்கத்துவ நாடுகளே இந்த எண்ணெய் உற்பத்திக் குறைப்பை மேற்கொண்டுள்ளது. இந்த அமைப்பு உலக மசகு எண்ணெய் உற்பத்தியில் சுமார் 40 வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இதில் சவூதி அரேபியா நாளுக்கு 500,000 பீப்பாய்களையும், ஈராக் 211,000 பீப்பாய்களையும் குறைக்கவுள்ளன. ஐக்கிய அரபு இராச்சியம், குவைட், அல்ஜீரியா மற்றும் ஓமான் நாடுகளும் உற்பத்திக் குறைப்பை மேற்கொண்டுள்ளன.

“எண்ணெய் சந்தையின் ஸ்திரத்தன்மைக்கு உதவும் நோக்குடனான முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஒன்றாகவே இது மேற்கொள்ளப்பட்டது” என்று சவூதி வலுசக்தி அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் புதிய எண்ணெய் வெட்டு தொடர்பில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபைக்கான ஆலோசகர் ஒருவர் கூறும்போது, “இந்தத் தருணத்தில் உற்பத்திக் குறைப்பு பொருத்தமானதாக நாம் நினைக்கவில்லை. அது சந்தையில் நிச்சயமற்ற நிலையை ஏற்படுத்தும் என்பதோடு நாம் அது பற்றி தெளிவாக உள்ளோம்” என்றார்.

ஏற்கனவே இந்த ஆண்டு இறுதி வரை நாள்தோறும் 2 மில்லியன் பீப்பாய் எண்ணெயைச் சந்தையிலிருந்து அகற்றும் திட்டம் நடப்பில் உள்ளது. அதனுடன் நாள்தோறும் 1.2 மில்லியன் பீப்பாய் எண்ணெய் உற்பத்தி குறைக்கப்படவுள்ளது.

இதன்படி உலகின் பெட்ரோலிய உற்பத்தியில் மொத்தம் சுமார் 3 வீதமாக குறைவுள்ளது. இது எண்ணெய் விலையை மேலும் அதிகரிக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.